# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 12 செவ்வாய்க்கிழமை (26-06-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:212


### இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள

# மட்டுவிலில் புலிகள் கிளைமோர்த் தாக்கு!

# ஏழு படையினர் சாவு! 22 பேர் படுகாயம்!!

## பலரின் நிலை கவலைக்கிடம்

கொழும்பு,ஜூன்26

**ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் முழுக் கட்டுப்பாட்டிலுள்ள மட்டுவில் வண்ணாத்திப்பாலப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் படையினரை ஏற்றிச்சென்ற பஸ் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் ஏழு படையினர் உயிரிழந்தனர்; 22படையினர் படுகாயமடைந்தனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.**

முகமாலைப் பகுதியில் பணி புரிந்த படையினர் விடுமுறையில் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்காகப் பலாலி விமான நிலையத்தை நோக்கி பஸ்ஸில் சென்று கொண்டிருந்தபோதே நேற்றுப் பிற்பகல் 1.20 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் நால்வர் அது இடம்பெற்ற இடத்திலேயே மரணமாகினர். எஞ்சியோர் ஆஸ்பத்திரியில் காலமாகினர்.

காயமடைந்த படையினர் உடனடியாகப் பலாலி இராணுவ ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து கொழும்பு ஆஸ்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைத் தாக்குதலுக்கு பதிலடியே மட்டுவிலில்!

வவுனியா,ஜூன்26

கடந்த 23 ஆம் திகதி சனிக்கிழமை கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில், தமது தரப்பில் லெப்டினன்ட் தமிழ்வேந்தன் என்பவர் களப்பலியானதுக்குப் பதிலடியாகவே, மட்டுவில் வண்ணாத்திப் பாலத்தில இராணுவத்தினர் பயணம் செய்த பஸ் மீது நேற்றுத் தாங்கள் கிளைமோர்த் தாக்குதல் நடத்தியதாக நேற்றிரவு 'புலிகளின் குரல்' வானொலி மூலம் விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

(உ-ஒ)

## கிளாலியில் ஞாயிறன்று மோதல் 2 சிப்பாய்கள் பலி; 4 பேர் காயம்

கொழும்பு,ஜூன்26

கிளாலிப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 12.25 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே மோதல் இடம்பெற்றதாகவும் -

இந்த மோதலின் போது சிறுரக ஆயுதங்கள் மற்றும் மோட்டார்கள் ஆகியவற்றை உபயோகித்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் இரண்டு சிப்பாய்கள் கொல்லப்பட்டதுடன், 4 படையினர் காயமடைந்ததாகவும் -

விசேட ஊடகத் தகவல் நிலையம நேற்று வெளியிட்ட கள நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

## கப்பல் பயணச் சீட்டு கொழும்பிலும் பெறலாம்!

கொழும்பு,ஜூன்26

திருகோணமலைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பலுக்கான பயண அனுமதி மற்றும் பயணச்சீட்டுக்களை கொழும்பில் பெற வசதி செய்யப்பட்டுள்ளது என்று அந்தக் கப்பல் முகவர்கள் தெரிவித்துள்ளனர்.

பயணிகள் அருகில் உள்ள பொலீஸ் நிலையத்தில் விண்ணப்பித்து பாதுகாப்பு அனுமதியைப் பெறமுடியும் என்றும் -

அதன் பின்னர், கொழும்பில் அறிவிக்கப்படும் ஓர் இடத்தில் ரிக்கெற்றைப் பெறலாம் என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர். (உ-3)

## புலிகளின் ஊடுருவல் அதிகரித்திருப்பதை மட்டுவில் தாக்குதல் கோடி காட்டுகிறது

கொழும்பு,ஜூன்26

படையினரின் முழுக்கட்டுப்பாட்டில் உள்ள மட்டுவில் பகுதியில் நேற்று விடுதலைப் புலிகள் பெரும் கிளைமோர்த் தாக்குதல் நடத்தியிருப்பது, அண்மைக்காலத்தில் குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல் அதிகரித்திருப்பதையே காட்டுகின்றது.

- இவ்வாறு பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் பிரான்சிஸ் ஹரிசன் தெரிவித்திருக்கிறார்.

அரச படைகளின் முழுக் கட்டுப்பாட்டுப் பகுதியில் - பட்டப்பகலில் - இப்படிப்பட்டதொரு தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது என்பதால் இது விடயத்தில் ஏதோ தவறு நிகழ்ந்திருக்கிறது என்று இராணுவ உயர் அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

இந்தச் சம்பவம் பற்றிய முழுமையான விவரங்கள் தமக்குக் கிடைக்கவில்லை என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

அதேவேளை, இரவில் புதைக்கப்பட்ட இந்தக் கண்ணிவெடி இராணுவ

(14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கட்சிகளின் ஆதரவைப் பெற சமாதானப் பேச்சைத் துரிதப்படுத்துக!

### அரசுத் தரப்புக் கூட்டணிக் கட்சிகள் வற்புறுத்தல்

கொழும்பு,ஜூன்26

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு அக்கறை காட்டவில்லை எனத் தெரிவித்து அதனால் அதிருப்தி அடைந்துள்ள தமிழ்க் கட்சிகளின் ஆதரவை மீளப் பெறுவதற்காக - சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தவேண்டும்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மேற்கண்டவாறு அரசை வற்புறுத்தியுள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற முன்னணியின் விசேட கூட்டத்தில் பங்குபற்றிய சகோதரக் கட்சிகள் கூட்டாக இந்தக் கோரிக்கையை முன்வைத்தன.

விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சை ஆரம்பிப்பதன் அவசியத்தை

(14ஆம் பக்கம் பார்க்க)

## மருதானையில் தமிழ்ப் பெண் மீது பொலீஸார் பாலியல் வல்லுறவு

### சோதனைச்சாவடியில் நடந்த கொடூரம்

கொழும்பு,ஜூன்26

கொழும்பு மருதானைப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவு பொலீஸ் சோதனைச்சாவடி ஒன்றில் வைத்து தமிழ்ப் பெண் ஒருவர் பொலீஸாரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக -

அந்தச் சோதனைச்சாவடியில் பணியாற்றிய இரு பொலீஸாரை மருதானைப் பொலீஸார் கைது செய்துள்ளனர். தலைமறைவாகியுள்ள மேலும் ஒரு பொலீஸ்காரரைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

பதுளை, பசறை, கிரினிகல தோட்டத்தைச் சேர்ந்த - கணவனையிழந்த - 28வயது தமிழ்ப்பெண்ணே பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டவராவார்.

நேற்று முன்தினம் இரவு தனது வேலைத் தலத்தில் இருந்து மருதானைச் சந்தியில் - சென்றல் திரையரங்கு அருகே - உள்ள சோதனைச்சாவடி வழியாகத் தனது தங்குமிடத்துக்கு இந்த யுவதி திரும்பிக்கொண்டிருந்ததாகவும் - அப்போது சோதனைச்சாவடிக்குள் இவர் பலவந்தமாக இழுக்கப்பட்டு வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் - கூறப்படுகிறது.

இந்த யுவதியுடன் வழித்துணை

(14ஆம் பக்கம் பார்க்க)

### 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி நாளை மறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் வழமைபோல் வாரத்திற்கு இரண்டு மாதிரி வினாத்தாள்கள் உதயனில் பிரசுரமாகும்.

வினாத்தாள்களின் மேலதிகப் பிரதிகளைப் பெறவிரும்பும் பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் பிரதி ஒன்றுக்கு ஒரு ரூபா வீதம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிகப் பிரதிகள் நிச்சயம் கிடைப்பதை உறுதி செய்ய விரும்புவோர் நேரத்துடன் பதிவு செய்து கொள்ளலாம்.

## ஆளும் கட்சி எம்.பிக்கள் சிலரை விலைக்கு வாங்க ஐ.தே.கட்சி முயற்சி?

கொழும்பு,ஜூன்26

அடுத்த மாதம் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்துக்கு வரும்போது அதனை எதிர்த்து வாக்களிக்கும் வகையில் அரசுத் தரப்பு எம்.பிக்கள் சிலரை விலைக்கு வாங்கும் நடவடிக்கையில் ஐ.தே.கட்சி ஈடுபட்டிருப்பதாக ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சந்தேகிக்கத் தொடங்கியிருக்கின்றது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளர் நாயகம் டி.எம். ஜயரட்னவும், அந்த முன்னணியைச் சேர்ந்த அமைச்சர் அத்தாவுட செனிவிரத்னவும் இது குறித்து அச்சம் தெரிவித்திருப்பதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

ஆகக் குறைந்தது ஐந்து எம்.பிக்களையாவது அரச தரப்பிலிருந்து விலைக்கு வாங்கும் திரைமறைவு நடவடிக்கைகளில் ஐ.தே.கட்சி ஈடுபட்டிருப்பதாக பொது மக்கள் ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் கூறுகின்றன. ஆனால் பக்கம் சாயும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவின் 12 எம்.பிக்கள் அரசுத்தரப்புக்கு ஆதரவாம்!

கொழும்பு,ஜூன்26

அரசுக்கு எதிராக ஐ.தே.கட்சி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக அந்தக் கட்சியின் 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்கவிருப்பதாக பிரதிஅமைச்சர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

ஐ.தே.கட்சியில் அதிருப்தி கொண்ட குழு ஒன்றைச் சேர்ந்த 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுடன் சேர்ந்து பிரேரணைக்கு எதிராக வாக்களிக்க விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும் -

ஜே.வி.பி. உறுப்பினர்களும் அரசுக்கு ஆதரவாக வாக்களிப்பர் என்றும் -

அவர் மேலும் சொன்னார். (உ-3)

# பள்ளி மாணவரிடையே ஏற்படும் உள ஊனம்

உள்ளம், மனம் என எமது எண்ணங்கள் செயற்பாடுகளின் மையத்தினை மொழி இலக்கியத்தில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. இதனை இன்றைய விஞ்ஞான வளர்சசியில் மூளைய நடத்தைக் கோலஙகள் காட்டுகின்றன. கணிதநுட்பம், மொழித்திறன், சிந்திக்கும் திறன், உணர்வுகளை வெளிக்காட்டுதல் என்பன மூளையின் நடத்தைக் கோலங்களாக அமைகின்றன.

மூளையின் விருத்தி தாயின் கருவில் ஆரம்பித்து ஐந்து வயது வரை நிகழுகின்றது. இதன் போது நரம்புக்கல இணைப்புக்கள் சிறத்தல் அடைகின்றன. மொழி ஆற்றல், சிந்திக்கும்திறன், உணர்வுகளை வெளிப்படுத்தல், கணிதநுட்பம், உடலியக்கம், சங்கீதத்திறன் என்பவற்றுக்கு ஏற்ப நரம்புக்கல இணைப்புக்கள் விருத்தியடைகின்றன. இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள் பயங்கர அனுபவங்களுக்குள்ளாகும் போது - உதாரணமாகப் பாரிய குண்டுச் சத்தத்தினைக் கேட்கும் போது - நரம்புக்கல இணைப்புக்கள் செயலிழக்கச் செய்யப்படுகின்றன. இதன் போது 'Amygdala' என்னும் மூளையின் பகுதி பாதிக்கப்படுகின்றது. இதனால் விழிப்புணர்வு கூடி மொழித்திறன் அறிவு சார் வெளிப்பாடுகள் குறைந்து விடும் இதனை உள ஊனம் ('Mind Palsy') எனலாம்.

நவீன விஞ்ஞானத் தொழில் நுட்பத்தால் பெறப்பட்ட மீ ஒலி யுத்த விமானங்கள் ஒரு சில நிமிடங்களில் பல ஆயிரக்கணக்கான குழந்தைகளில் உளத்தாக்கத்தை ஏற்படுத்தவல்லன.

இரண்டு மூன்று வயதில் பெறும் தூண்டல்கள் குழந்தைகளின் பிற்காலத்தை நிர்ணயிப்பதில் முக்கிய

## சுகநலம்

பங்கைப் பெறுகின்றன;சிறந்த வல்லுனர்களாகவோ, மாமேதைகளாகவோ, வர வழிவகுக்கின்றன. பெற்றோர்களே குழந்தைகளின் சிறந்த ஆசான்கள். ஆதலால் சிறு வயதிலிருந்தே குழந்தைகளின் சிந்தனையை விருததி செய்யும் வகையில் நடவடிக்கைகளை எடுக்கலாம். உதாரணமாக இன்னிசை நிகழ்ச்சிகள், இயற்கை காட்சிகள், சித்திரங்கள் போன்றவற்றில் ரசனையை ஏற்படுத்தலாம்.

வெளி உலகுடன் தொடர்புகொளவதற்கான ஆயத்தங்களை குழந்தைகள் பெற்றோரிடமிருந்தே கற்றுக் கொள்கின்றன. அவர்களுக்கு ஒழுங்கு, கட்டுப்பாடு போன்றவற்றை பெற்றோரே கற்றுக் கொடுத்தல் வேண்டும். குழந்தைகளுடன் நெருக்கத்தை ஏற்படுத்தி அன்பு காட்டுதல் வேண்டும். கோப உணர்வுகளின் துடிப்பை அடக்குவது, குழந்தைகளுடனான நெருங்கிய உறவு, கடவுள் நம்பிக்கை, உணமை பேசுதல், இயற்கையைக் கற்றல், ஆக்கபூர்வமான கதை கேட்டல், சேவை செயயும் மனப்பான்மையை வளர்த்தல், போன்றவற்றைக் குழந்தைகளுக்குப் படிப்படியாகக் கற்றுக் கொடுத்தல் வேண்டும். இது குழந்தைகளின் உடல், உள, ஆன்மீக, சமூக விருத்தியை வளர்க்கும்.

இறைவன் ஒவ்வொரு குழந்தையையும் உன்னத மனிதனாகப் படைக்கின்றான். இதனை வெளிப்படுத்துவது எம் கைகளிலேயே தங்கியுள்ளது. குழந்தைகள் பெறும் ஆரம்பக்கல்வி அவர்களது எதிர்கால வாழ்வுக்கு அத்திவாரமாக அமையும். பாடசாலை செல்லும் சிறுவர்கள் பல நெருக்கீடுகளை எதிர்கொள்கின்றனர். இந்த நெருக்கீடுகள் பாடசாலையில் கல்வி கற்றலுடன் நேரடித் தொடர்புடையனவாகவோ, குடும்ப சூழ்நிலை தொடர்பானதாகவோ, தற்போதைய யுத்த சூழ்நிலை தொடர்புடையதாகவோ அமையலாம்.

பாடசாலை மாணவர்களுக்குச் சரீர தண்டனையளித்தல் தவிர்க்கப்படல் வேண்டும். தற்காலப் பாடவிதானம் சரீரத் தண்டனைகள் மூலம் மாணவர்களின் கல்வி ஆற்றலை மேம்படுத்துமாறு அமையவில்லை. உளவியல் அறிஞர்களின் வழிகாட்டலுடனேயே பாடவிதானம் அமைக்கப்படுகிறது. எனவே ஆசிரியர்கள், 'மாணவர்களுக்குக் கல்வி புகட்டுவதற்காகவே அடித்தோம்' என்றோ அல்லது தாமும் அடிவாங்கித்தானே படித்தோம் என்றோ வாதிடக்கூடாது.

உதாரணம்:-

பதினைந்து வயதுச் சிறுமி தனது தொடையிலும், புயத்திலும் அடிகாயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாள். அச்சிறுமியிடம் வினவியபோது. பாடசாலை அதிபர் பிரம்பினால் தண்டித்ததாகக் கூறினாள்.

மேலும் தண்டனை வழங்கும் போது ஒருவரது கோப உணர்வு மற்றவருக்குப் பகிரப்படுகின்றது. ஆசிரியரொருவர் மாணவனுக்கு அடிக்கும் போது அவரது 'முழுக் கோபமும்' மாணவனைத் தாக்குகின்றது. ஆனால் இம் முழுக் கோபமும் மாணவனின் கல்வி கற்றலுடன் சம்பந்தப்பட்டதல்ல.

உதாரணம்:-

ஆண்டு ஐந்து படிக்கும் சிறுவன் வலது காது கேட்காது தாயாரினால் வைத்தியசாலைக்குக் கூட்டி வரப்பட்டான். அவன் பாடசாலை செல்வதையே நிறுத்தி விட்டான். காரணம் கணித பாட ஆசிரியர் காதைப் பொத்தி அடித்ததாகக் கூறினான்.

வகுப்பறையின் அமைப்பு, சக மாணவருடன் தொடர்பு, ஆசிரியரின் நடத்தை, அதிபரின் கண்டிப்பு மற்றும் மாணவ தலைவர்களின் ஆதிக்கத் தன்மை என்பன பாடசாலைக்குச் செல்லும் மாணவனுக்கு ஏற்படும் - நெருக்கீட்டில் செல்வாக்குச் செலுத்துகின்றன மற்றும் பாடவிதானம், பரீட்சை, போட்டிகள் என்பனவும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இவற்றில் 5 ஆம் தரப் புலமைப் பரீட்சை ஜி.சீ.ஈ.சாதரணதரம் உயர்தரப் பரீட்சைகள் முக்கிய மானவையாகும். பாடசாலையுடன் தொடர்பான நெருக்கீடுகளை விட பொருளாதார சமூகப் பிரச்சினைகளும் மாணவனை நெருக்கீட்டுக்கு உள்ளாக்குகின்றன. வீட்டின் பொருளாதார நிலை மாணவனைப் பெரிதும் பாதிக்கின்றது. மூன்று வேளை உணவு, பாடசாலைச் சீருடை என்பன சில மாணவர்களுக்கு நெருக்கீடாக அமைகின்றன.

பாடசாலைகளின் தரத்திற்கு ஏற்ற சீருடை அணிய மாணவனது குடும்பப் பொருளாதார நிலை பொதுமானதாக இல்லாதிருக்கலாம் மற்றும் வீட்டில் பெற்றோர்கள் சகோதரர்களின் ஒத்துழைப்பு எவ்வாறு அமைகிறது என்பதிலும் தங்கியுள்ளது. வீட்டில் படிக்கும் அறை. மின்சார வசதி, விளக்கு வசதி எவ்வாறிருக்கின்றது என்பதும் ஒரு காரணியாக அமைகின்றது.

மேற்கூறப்பட்டவற்றை விட இன்றைய யுத்த சூழ்நிலை மிகமிகப் பிரதான பங்கைப் பெறுகின்றது. வன்முறைச் சம்பவங்களின் போது ஏற்படுத்தப்படும் தூண்டல்களும் கொடூரக் காட்சிகளும் ஒருவரின் மனதில் பதியப்படுகின்றன. இதில் நிகழும் சாதாரண காட்சிகள் பின் அச்சம்பவங்களை மீள நினைவூட்டுகின்றது. இது அவர்களின் உடல் ரீதியாகவோ, உணர்வு ரீதியாகவோ, எண்ணங்கள் வாயிலாகவோ, அறிவு சார்ந்த முறையிலோ, நடத்தை வேறுபாடாகவோ பிரதிபலிக்கும்.

உதாரணம்:-

பத்து வயதுச் சிறுவன் வலிப்பு நோயிற்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். அவனுக்கு காலை 8 மணியளவிலும் மதியம் 2 மணியளவிலும் இரவு 7 மணியளவிலும் வலிப்பு வரும். அவன் வைத்தியரின் சோதனை அறைக்குள் வந்த போது பயந்து கத்தி கட்டிலின் கீழே படுத்து விட்டான். அழுத போது குண்டு போடப்பட்டு விட்டது என்று கத்தினான். அவனது தந்தையிடம் வினவிய போது 5 வருடங்களுக்கு முன் நவாலி தேவாலயத்தில் குண்டு போடும் போது அவன் உயிர் தப்பியமை தெரியவந்தது. அவன் மின் விசிறி சுற்றும் போது ஹெலிக்கொப்ரர் எனப் பயந்தான். மற்றவர்கள் அழும் போது (ஊசி போடும் போது எல்லாக் குழந்தைகளும் எழுப்பும் அவலக்குரல்) அவனுக்கு பழைய காட்சியை நினைவு படுத்தி வலிப்பினை உருவாக்குகின்றது.

### டாக்டர் சி.யமுனாநந்தா

மாணவர்களுடன் கதைக்கும் போது அவர்களிடம் தீர்மானம் எடுப்பதிலுள்ள கஷ்டம் வெளிப்படும். அவர்கள் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதிலும் திறமையற்றவர்களாகக் காணப்படுவர். பொதுவாக மாணவர்களின் முறையீடுகளாக 'படிக்க முடியவில்லை', 'படிப்பதற்கு நேரம் போதாது' என்பன அமைகின்றன. இதற்கு அவர்கள் சக மாணவர்களுடனும் கதைத்து நேர அட்டவணைப்படி

(13ஆம் பக்கம் பார்க்க)


## ஐங்கரன் கணனிச் சேவை & தொலைத் தொடர்பு

எமது சேவையில்

- ★ Inter net ★ E-mail
- ★ Printing, Typesetting
- ★ Colour Printing
- ★ Scaning
- ★ Audio and Video(CDயில் பதிவு செய்தல்)



HP 9300 CD Writer மூலம் MB3 மூலம் பாடல் பதிவுகள்

அதிநவீன கணனிகளும் விற்பனைக்குண்டு.

Pentium III 800 MHz, 667 MHz

ஐங்கரன் கொமினிக்கேசன்
பராஜசேகரப் பிள்ளையார் கோயிலடி,
இணுவில் தெற்கு.
T.P 070 - 212636
E-Mail aingaran @ SLT net. Lk

கிளை:
Sounder Place
Kunasinga pura
Colombo - 12
T.P 422227

(89461)



யாழ்.சதுரங்க சம்மேளனமும்
இலங்கை சதுரங்க சம்மேளனமும்
(SLCF) இணைந்து நடத்தும்

## அகில இலங்கை இளையோர்க்கான சதுரங்கப் போட்டிக்கான மாவட்ட மட்டத் தெரிவுப்போட்டி - 2001

காலம்: ஜூலை 6ஆம், 7ஆம், 8ஆம் திகதிகள்
காலை 8.30 முதல் மாலை 4.30 வரை (புதியநேரம்)

பிரிவுகள்: ★ 10 - வயதிற்குக்கீழ் ★ 12 - வயதிற்குக்கீழ்
★ 14 - வயதிற்குக்கீழ் ★ 16 - வயதிற்குக்கீழ்
★ 18 - வயதிற்குக்கீழ் ★ 20 - வயதிற்குக்கீழ்
★ (ஆண்கள், பெண்கள் தனித்தனியாக)

★ அங்கத்துவத்திற்கான விண்ணப்பப்படிவத்தைக் கீழ்வரும் முகவரியில் பெற்று 03-07-2001ஆம் திகதிக்கு முன்னதாகச் சமர்ப்பிக்கவும்.

★ விண்ணப்பப்படிவத்துடன் பிறப்புச் சான்றிதழின் புகைப்படப்பிரதி இணைக்கப்படவேண்டும்.

★ தொடர்பு முகவரி: இணைச்செயலாளர்,
யாழ்.சதுரங்க சம்மேளனம்,
70/1, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

முக்கிய குறிப்பு:

★ போட்டி நடைபெறும் இடம் 04.07.2001ஆம் திகதிக்குரிய 'உதயன்' பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

★ போட்டியாளர்கள் ஏதாவது ஒரு வயதுப் பிரிவில் மாத்திரமே கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

செயலாளர்,
யாழ்.சதுரங்க சம்மேளனம்.

(89459)



## மணீஸ் வெளியீடு நடத்தும் போட்டிப் பரீட்சை

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில்
முன்மாதிரிப் போட்டிப் பரீட்சை - 2001
போட்டிப் பரீட்சை 2 இற்கான வெட்டுப் புள்ளி
அடிப்படையிலான நேற்றைய பத்திரிகை விளம்பரத்தில்
தவறவிடப்பட்ட பெறுபேறுகள்

| | | |
|---|---|---|
| த.ஆரண்யா | - | 158 (யா/நெ.மி.த.க.பா.) |
| கு.மகிழினி | - | 148 (யா/போக்.அ.த.பா.) |
| அ.சஜீவன் | - | 145 (யா/உடு.அ.மி.க.) |

சதா பொன்ஸ,
அல்வாய்.

(C/17229)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 10-06-1919
மறைவு 27-05-2001

### அமரர் கதிர்காமு கிருஷ்ணபிள்ளை
(முன்னாள் அதிபர்)

இன்று (26-06-2001) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நிகழும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

துவாரகை,
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மகன் - சப்தகிரிநாதன்.

(C/17230)



## Jaffna College
VADDUKODDAI

### FOUNDER'S DAY & PRIZE GIVING

Will be held on Wednesday the 27th June 2001 at 10.00 a.m.
in the 'OTTLEY HALL'

Chief Guests:
Prof. R.Kumaravadivel
(The Dean, Faculty of Science, University of Jaffna)
and
Mrs. Ranjini Kumaravadivel
You are cordially invited.

JAFFNA COLLEGE,
VADDUKODDAI.

The Rev. Anthony A.Paul
PRINCIPAL.

(C/17228)



## சேவை நலம் பாராட்டி வாழ்த்துகிறோம்

யா/இளவாலை றோ.க.த. ஆண்கள் பாடசாலையின்
அதிபராக இருந்து ஓய்வு பெற்ற

### திரு.ம.அ.அல்பிறெட்

அவர்களது சேவை நலனைப் பராட்டுவதுடன், பதவி உயர்வுடன் சகல சிறப்புக்களும் பெற்று வாழ வாழ்த்துகிறோம்.

உதவிக் கல்விப் பணிப்பாளர்,
அதிபர்கள்,
சண்டிலிப்பாய்க் கல்விக்கோட்டம்.

(89455)



## முக்கிய அறிவித்தல்

தென்மராட்சியில் மீளக்குடியமர அனுமதிக்கப்படாதபகுதிகளாகய
மறவன்புலோ, தனங்களப்பு, கைதடி நாவற்குழி,
கோயிலாக்கண்டி, நாவற்குழி கிழக்கு, நாவற்குழி மேற்கு
கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தமது முழுப்பெயர், நிரந்தர, தற்காலிக முகவரி, தே.அ.அ. இலக்கம், குடும்ப எண்ணிக்கை போன்ற விவரங்களைத் தமது நிரந்தர பிரிவு கிராம உத்தியோகத்தர்களிடம் (தென்மராட்சி கிராம உத்தியோகத்தர்) 28-06-2001 இற்கு முன்பு பதிவு செய்துகொள்ளும்படி தென்மராட்சிப் பிரதேச செயலர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பிரதேச செயலர்,
தென்மராட்சி.

(C/17224)

# பிரிட்டிஷ் பாடசாலைகளுக்கு இந்தியாவிலிருந்து ஆசிரியர்கள்

## பற்றாக்குறையை நீக்க நடவடிக்கை

லண்டன்,ஜுன்26

பிரிட்டிஷ் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்குப் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதை அடுத்து இந்தியாவில் இருந்து ஆசிரியர்களை வரவழைக்க பிரிட்டிஷ் அரசு திட்டமிட்டுள்ளது.

இதன்படி முதற்கட்டமாக ஆயிரம் ஆசிரியர்களை பிரிட்டனுக்கு அழைத்துக் கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் தவணை ஆரம்பமாக உள்ள பாடசாலைகளில் கடமையாற்றுவதற்கென 600 ஆசிரியர்கள் உடனடியாக நியமிக்கப்பட உள்ளனர்.

பிரிட்டனில் ஆசிரியத் தொழிலை மேற்கொள்ள விரும்புவோர் எண்ணிக்கை மிக வேகமாகக் குறைந்து வருவதை அடுத்தே பாடசாலை ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலைமை இப்படியே தொடர்ந்தால் விரைவில் ஆசிரியர்களுக்கான தேவை 40 ஆயிரம் என்ற எண்ணிக்கையை எட்டிவிடும் என்று பிரிட்டிஷ் பாடசாலை அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-9)

# அதிபர் வாஹிட் பயணம் செய்த விமானத்தில் இயந்திரக் கோளாறு

## அவசர அவசரமாகத் தரையிறக்கம்

ஜகார்த்தா,ஜுன்26

இந்தோனேசிய அதிபர் அப்துல் ரஹுமான் வாஹிட் ஆஸ்திரேலியாவுக்குச் சென்று கொண்டிருந்த விமானத்தில் திடீரென இயந்திரக் கோளாறு ஏற்பட்டதால் அவசர அவசரமாகத் தரை இறக்கப்பட்டது.

விமானத்தில் கோளாறு ஏற்பட்டதை அடுத்து விமானி அதனை டார்வினிக் விமான நிலையத்தில் சமயோசிதமாகத் தரை இறக்கி விபத்து ஏற்படாதவாறு பாதுகாத்தார்.

விமானத்தின் கோளாறு சரி செய்யப்பட்டதை அடுத்து அதிபர் வாஹிட் தொடர்ந்து தனது பயணத்தை மேற்கொண்டார்.

இந்தோனேசியாவில் கடும் அரசியல் நெருக்கடி நிலவிவரும் இந்த வேளையில் அதிபர் வாஹிட் ஆஸ்திரேலியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளமை குறித்து அரசியல் அவதானிகள் வியப்புத் தெரிவித்துள்ளனர். (ம)

# குண்டு வெடிப்பில் பலஸ்தீனர் ஒருவர் பலி

ஜெருசலேம்,ஜுன்26

பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தின் ஷட்டா இயக்க உறுப்பினர் ஒருவர் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டுள்ளார்.

ஒஸாமா யமாத்துல்லா (வயது 29) என்ற இளைஞரே கொல்லப்பட்டவராவார்.

பொதுத் தொலைபேசி நிலையம் ஒன்றில் இருந்த தொலைபேசியை இயக்க முனைந்தபோது அதில் பொருத்தப்பட்டிருந்த குண்டு வெடித்தே இவர் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டது. (ம-9)

# சீனாவில் சூறாவளி

பீஜிங்,ஜுன்26

சீனாவின் தென்கிழக்குக் கரையோரப் பகுதிக்கு அண்மையில் உள்ள நகரம் ஒன்றில் வீசிய சூறாவளியால் 21 பேர் பலியாகினர்; 38 பேரைக் காணவில்லை; மூவர் படுகாயமடைந்தனர்.

உலக அரங்கில்

இந்தச் சம்பவம் கடந்த 25ஆம் திகதி இரவு இடம்பெற்றது. உடைமைகள் தொடர்பான சேத விவரங்கள் எதையும் சீனாவின் ஊடகங்கள் உத்தியோகபூர்வமாக இதுவரை அறிவிக்கவில்லை. (ம)

# 'இன்ரநெற்' பயன்படுத்த ஈரானில் புதிய கட்டுப்பாடு

தெஹ்ரான்,ஜுன்26

ஈரானில் 'இன்ரநெற்'றைப் பயன்படுத்துவதற்கு புதிய கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அரச தொலைத் தொடர்புத் திணைக்களம் நேற்று இந்த அறிவிப்புக்களை விடுத்தது.

சில இணையத் தளங்களைத் தடுத்துவிடுமாறு 'இன்ரநெற்' இணைப்புக்களை வழங்கும் நிலையங்களுக்குக் கடும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 18 வயதுக்குக் குறைந்த சிறுவர்கள் சில இணையத் தளங்களைப் பார்வையிட அனுமதிக்க வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த உத்தரவுகளை மீறுவோருக்கு எதிராக மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு தெரிவித்துள்ளது.

ஈரானின் அதிபராக முகமட் கடாமி இரண்டாவது தடவையாகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அவர் எடுத்துள்ள மிகமுக்கிய முடிவு இது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதிபராகப் பதவியேற்ற பின்னர் உரையாற்றிய அதிபர் கடாமி சீர்திருத்தங்களைத் தான் தொடர்ந்து முன்னெடுக்கப் போவதாகக் குறிப்பிட்டிருந்தார். (ம-9)

## எல்லைக் காடுகளில் செயற்பட்டுவரும்

# தீவிரவாதிகளை வெளியேற பூட்டான் மன்னர் பணிப்பு

திம்பு,ஜுன்26

பூட்டானில் முகாம்களை அமைத்துத் தங்கி உள்ள இந்தியத் தீவிரவாத அமைப்புக்களை நாட்டைவிட்டு வெளியேறுமாறு பூட்டான் மன்னர் அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பு வெளியானதையடுத்து பூட்டான் அரச அதிகாரிகள் தீவிரவாதிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர்.

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் பிரிவினை கோரிப் போராடிவரும் உல்பா மற்றும் போடோ தீவிரவாத அமைப்புகளே பூட்டானில் இந்திய எல்லையோரக் காடுகளில் முகாம்களை அமைத்துத் தங்கி உள்ளனர்.

1990ஆம் ஆண்டு அசாமில் இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட பாரிய படைநடவடிக்கையை அடுத்து இவர்கள் அங்கிருந்து தப்பி பூட்டானுக்குள் புகுந்தனர். இந்திய - பூட்டான் எல்லைப் பகுதிக்குள் இருந்து செயற்பட்டுவரும் இந்த அமைப்புகள் அவ்வப்போது இந்திய இராணுவம் மீது கெரில்லாத் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

இதனால் இவர்களது செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துமாறு இந்திய அரசு பூட்டானுக்கு அழுத்தம் கொடுத்து வந்தது. அத்துடன் பூட்டான் இராணுவத்துக்கும் தீவிரவாதத்துக்கு எதிரான பயிற்சிகளையும் இந்தியா அளித்தது.

இவற்றை அடுத்தே தற்போது அமைதியாக நாட்டைவிட்டு வெளியேறுமாறு பூட்டான் மன்னர் தீவிரவாதிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (ம-9)

## நீண்டகாலமாகத் தேடப்பட்டு வந்த

# முன்னாள் உளவுத்துறை அதிகாரி பெரு நாட்டுப் பொலீஸாரிடம் சிக்கினார்

லிமா,ஜுன்26

பெருநாட்டு அதிகாரிகளால் தேடப்பட்டு வந்த பெரு உளவுத்துறையின் முன்னாள் தலைவர் விளாடிமோரோ மொன்டசினோ வெனிசூலாவில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெனிசூலா அதிபர் ஹியூகோ ஷாவின் உத்தரவின் பேரில் அவர் உடனடியாக பெருவுக்கு நாடுகடத்தப்பட்டார்.

பெருவைக் கதிகலங்க வைத்த பல குற்றச்செயல்களுடன் மொன்டசினோவுககுத் தொடர்பிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டதை அடுத்து இவர் நீண்ட நாள்களாகத் தேடப்பட்டு வந்தார்.

பெருவின் ஜனாதிபதியாக பிஜிமோரி பதவியில் இருந்தபோது அவரது நம்பிக்கைக்குரிய அதிகாரியாக இருந்தவர் மொன்டசினோ.

இவர் மீது கொலைகள், ஆயுதக் கடத்தல்கள், மனித உரிமைகளை மீறியமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு பிஜிமோரி ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டதைத் தொடர்ந்து மொன்டசினோ பெருவை விட்டுத் தப்பி ஓடினார்.

கட்சி மாற்றத்துக்காக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மொன்டசினோ பணம் கொடுத்ததைக் காட்டும் வீடியோ நாடா கடந்த மாதம் பெருவில் பெரும பரபரப்பை ஏற்படுத்தியது.

நாட்டைவிட்டுத் தப்பியோடியதும் அவர் தனது முகத்தை 'பிளாஸ்ரிக் சேர்ஜரி' மூலம் மாற்றி அமைத்துக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் உருவமாற்றத்துடன் இருந்த மொன்டசினோவைப் பொலீஸார் எவ்வாறு கைது செய்தனர் என்ற விவரம் தெரியவில்லை.

வெனிசூலா நாட்டுப் பொலீஸாரின் உதவியுடன் பெருநாட்டு இரகசியப் பொலீஸார் அவரைக் கைது செய்ததாக மட்டுமே அறிவிக்கப்பட்டுள்ளது.

மொன்டசினோ மீதான விசாரணைகள் மிக விரைவில் ஆரம்பமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.(ம-9)

# இஸ்ரேலியப் பிரதமர் ஷெரோன் அமெ. அதிபரைச் சந்தித்துப் பேச்சு

வாஷிங்ரன்,ஜுன்26

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் நேற்றுமுன்தினம் அமெரிக்கா போய்ச் சேர்ந்தார்.

அமெரிக்க ராஜாங்க அமைச்சர்களுடன் முக்கிய பேச்சுக்களை அவர் மேற்கொள்வார் என உத்தியோகபூர்வ செய்திகள் தெரிவிக்கின்றன.

பலஸ்தீனத் தீவிரவாதிகளுடனான மோதல்கள் மற்றும் அவர்களுடனான பேசசுவார்த்தை, இஸ்ரேலுக்கு பலஸ்தீனத் தீவிரவாதிகளால் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்கள் என்பன பேச்சுககளில் முக்கியமாக ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று வெள்ளை மாளிகைக்குச் செல்லும் ஷெரோன் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்.டபிள்யூ.புஷ்ஷைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

இஸ்ரேலிய அமைச்சர்களின் ஆலோசனையின் பேரிலேயே ஏரியல் ஷெரோன் அமெரிக்காவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார். எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏரியல் ஷெரோன் அமெரிக்கா செல்லும் முன் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். பலஸ்தீனர்கள் சமாதான முயற்சிகளில் ஈடுபட பிரிட்டன் அதிக அழுத்தம் செலுத்த வேண்டும். ஷெரோன் பிளயரிடம் இவ்வாறு கேட்டுக் கொண்டார். (ம)

# மணிப்பூரில் நேற்று வழமை நிலை ஊரடங்கு எட்டு மணி நேரம் தளர்வு

இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை எட்டு மணித்தியாலங்களுக்குத் தளர்த்தப்பட்டது. நேற்றுக் காலை ஐந்து மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை ஊரடங்கு தளர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

மணிப்பூரில் கடந்த 18ஆம் திகதி முதல் வெடித்த கலவரத்தை அடுத்து அங்கு காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டத்தை மணிப்பூர் பொலீஸார் நடைமுறைப்படுத்தினர்.

தற்போது மணிப்பூர் மாநிலம் சாதாரண நிலைமைக்குத் திரும்பி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வங்கிகள், அரச நிறுவனங்கள் முதலானவை மீளச் செயற்படத் தொடங்கியுள்ளன. கடந்த 15ஆம் திகதி முதல் வங்கிகள் செயற்படாததால் நேற்று வங்கிகளில் மக்கள் நிரம்பி வழிந்தனர். தற்போதைக்கு ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ள நேரத்தில் மட்டுமே வங்கிகள் செயற்படுமென பொலீஸார் தெரிவித்தனர்.

மக்கள் தமது அன்றாடத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு வீதிகளுக்கு வந்திருந்தனர்.

நிலைமையைக் கண்காணித்து ஊரடங்குச்சட்ட நேரம் மேலும் தளர்த்தப்படுவது குறித்து பரிசீலிக்கப்படும். தீவிரவாதச் செயல்கள் தொடர்ந்து இடம்பெறாத வண்ணம் மணிப்பூரின் தலைநகர் இம்பாலில் பொலீஸாரின் ரோந்து நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என இம்பால் பொலீஸ் அதிகாரி சித்திக் தெரிவித்தார்.

நாகலாந்து தீவிரவாதிகளுடனான யுத்த நிறுத்தத்தை மேலும் நீடிக்க இந்திய மத்திய அரசு அறிவித்திருந்ததை அடுத்து மணிப்பூரில் கலவரம் ஆரம்பமானது. இதனால் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டனர். அரச கட்டடங்கள், கடைகள் ஆகியவை தீக்கிரையாக்கப்பட்டன.

இதேவேளை இம்பாலின் புறநகர்ப் பகுதிகளில் நேற்று முன்தினம் இரு கிளர்ச்சிக் குழுக்களுக்கு இடையில் வெடித்த மோதலில் பத்துப் பேர் கொல்லப்பட்டனர் என உத்தியோகபூர்வமற்ற செய்திகள் தெரிவித்தன.

# ஆப்கானுக்கு ஐ.நா. உதவி

வாஷிங்ரன்,ஜுன்26

வட ஆப்கானிஸ்தானில் நிலவும் மனிதாபிமான நெருக்கடியை முன்னிட்டு சர்வதேச நிவாரணக் குழுக்கள், தங்கள் முதலாவது பெரிய முகாம்களை அமைத்து வருகின்றன.

யுத்தம், வரட்சி, ஏழ்மை ஆகியவற்றினால் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவும் பொருட்டு இவை அமைக்கப்பட்டு வருகின்றன.

சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் வீடில்லாமல் இருப்பதுடன் அவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என ஐநா. அறிக்கை ஒன்று கூறுகிறது.

முதலில் அமைக்கப்படும் இரு முகாம்களும் தலா 5000 குடும்பங்களைப் போஷிக்கும் நிலையில் இருக்கும். கடந்த 21 ஆண்டுகளாக ஆப்கானிஸ்தான் சிவில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. (ம)

## பாகிஸ்தானில்

# சர்வகட்சி மாநாட்டுக்கு முஷாரப் அழைப்பு

இஸ்லாமாபாத்,ஜுன்26

அடுத்த மாதம் இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் நடத்த உள்ள பேச்சுக்களின் போது ஆராயப்பட உள்ள விடயங்கள் குறித்துக் கலந்துரையாடுவதற்காகப் பாகிஸ்தான் அதிபர் பெர்வேஷ் முஷாரப் சர்வகட்சி மாநாடு ஒன்றைக் கூட்டி உள்ளார்.



நாளை புதன்கிழமை இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. சகல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், கொரியத் மாநாட்டுப் பிரதிநிதிகள், பாகிஸ்தானைத் தளமாகக் கொண்டு இயங்கும் தீவிரவாத அமைப்புகளின் தலைவர்கள் ஆகியோருக்கு இந்த மாநாட்டில் கலந்து கொள்ள அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

வாஜ்பாயுடனான பேச்சுக்கள் குறித்து ஆலோசனை பெறுவதற்காகவே இந்தக் கூட்டம் கூட்டப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

முஷாரப்பின் இந்திய விஜயம் குறித்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அடுத்த மாதம் 14 ஆம் திகதி இந்தியா செல்லும் முஷாரப் அங்கு ஜனாதிபதி மாளிகையில் தங்குவார். ஜனாதிபதி கே.ஆர்.நாராயணனுடன் பேசுவார். மறுநாள் 15 ஆம் திகதி இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் பேச்சு நடத்துவார். எதிர்கட்சித் தலைவி சோனியாகாந்தியையும் அவர் சந்தித்துப் பேச உள்ளார்.

தனது விஜயத்தின் போது மாகாத்மா காந்தி நினைவிடத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்துவதுடன் பழைய டில்லியில் தான் பிறந்த இடத்தையும் அவர் சென்று பார்வையிட உள்ளார். (ம-9)

# மத்திய பிலிப்பைன்ஸில் எரிமலை வெடிக்கும் அபாயம்

மணிலா,ஜுன்26

பிலிப்பைன்ஸில் உள்ள மயோன் எரிமலை வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

முன் எச்சரிக்கை நடவடிக்கையாக மலையைச் சுற்றி உள்ள பிரதேசத்தில் இருந்து 20 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸின் மத்திய பகுதியில் உள்ள இந்த எரிமலை கடந்த சில நாள்களாகக் குமுறிக்கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எரிமலைக் குழம்புகள் வெளியே கக்கப்பட்டு வருவதுடன் சிறிய அளவில் நில அதிர்வுகளும் ஏற்பட்டு வருவதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் இந்த எரிமலை பெரிய அளவில் வெடிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

# பெருவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 70ஆக உயர்வு

லிமா,ஜுன்26

தென்னமெரிக்க நாடுகளான பெரு, பொலிவியா, சிலி ஆகிய நாடுகளில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 70 ஆக அதிகரித்துள்ளது. 500க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகமாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. நிலைமைகளைச் சமாளிக்க பெருவில் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நில நடுக்கத்தால் பசுபிக் பெருங்கடலில் கடல் கொந்தளிப்பு ஏற்படலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

# சிங்களவர் தலைநிமிர்ந்து வாழ வழிவகுப்போரை ஆதரிப்போம்!

## சிஹல உறுமய எம். பி. கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 26
புலிகளை இராணுவத்தின் மூலம் அழித்துச் சிங்கள இனம் தலை நிமிர்ந்து வாழ வழிகாட்டுபவர்களையே நாம் ஆதரிப்போம்.

இப்படிக் கூறுகிறார் சிஹல உறுமய எம். பி. சம்மிக்க ரணவக்க.

இதைச் செய்யாது, புலிகளோடு சமாதானப் பேச்சுவார்த்தை எனக் கூறிக்கொண்டு, வெளிநாடுகளுக்கு வளைந்து கொடுத்து இனத்தைக் காட்டிக்கொடுக்க முயற்சிக்கும் எந்த ஒரு கட்சியையும் நாம் ஆதரிக்கத் தயாரில்லை.

புலிகள் இயக்கம் இராணுவ ரீதியாக அழிக்கப்பட வேண்டும். சிங்கள இனம் மேலாண்மை இனமாக மதிக்கப்பட வேண்டும். பொருளாதார நிலை மேன்மையடைய வேண்டும். இனவாதக் கட்சிகளுடன் கூட்டுச் சேராதிருத்தல் வேண்டும்.

மேற்கண்ட எமது கோரிக்கைகளை எந்தக்கட்சி உறுதிப்படுத்துகிறதோ அப்போது நாம் ஆதரிப்பதா? இல்லையா? என்பதை முடிவு செய்வோம்.

எதிர்வரும் நாள்களில் அரசியல் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு சிங்கள இனத்துக்கு விமோசனத்தை ஏற்படுத்தக்கூடிய கட்சியை நாம் ஆதரிப்போம் என்றும் சம்மிக்க ரணவக்க எம்.பி. தெரிவித்தார், (ஐ)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, ஜூன் 26
நல்லூர் பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் இடையே பிரதேச சபையினால் நடத்தப்பட்டு வரும் 7 பேர் பங்கு பற்றும் 6 பந்து பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன. (க-86)

★ ★ ★

வலி. வடக்கு ஜூன் 26
யாழ். பல்கலைக்கழக விளையாட்டுப் பேரவை யாழ் மாவட்ட ரீதியில் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டம் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் யாழ்ப்பாணம்பல்கலைக்கழக தாச்சி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.

இந்த ஆட்டத்தில் இணுவில் அண்ணா வி. காவை எதிர்த்து கோண்டாவில் மறுமலர்ச்சி வி. க. மோதும். (க-86)

★ ★ ★

வலி. வடக்கு ஜூன் 26
யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் பாடசாலைகள் இடையே நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை 15 வயதுக் குட்பட்டோர் பிரிவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும், சென். பற்றிக்ஸ் கல்லூரியும் விளையாடவுள்ளன. (க-86)

# அவசரகாலச் சட்டம் தோற்றால் அரசுக்கு பாதுகாப்பு நெருக்கடி

கொழும்பு, ஜூன் 26
அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணை அடுத்த மாதம் 6 ஆம் திகதி நாடாளுமன்றத்தில்விவாதத்துக்கு எடுக்கப்படவுள்ளது.

இந்த முறை அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டால் அரசுக்கு பாதுகாப்பு நெருக்கடி ஏற்படும் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அண்மைக் காலத்தில் அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணையை ஐ. தே. கட்சியும் ஜே. வி. பியும் எதிரணியில் உள்ள தமிழ்க் கட்சிகளும் எதிர்த்து வாக்களித்துவந்தன கடந்த 7ஆம் திகதி இப்பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்ட சமயம்7 மேலதிக வாக்குகளால் இப்பிரேரணை நிறைவேறியது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய ஐக்கியமுன்னணி ஆகியன அவசரகாலச் சட்ட நீடிப்பை ஆதரித்துவாக்களித்தன. தற்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்கள் ஏழுபேர் அரசில் இருந்து வெளியேறிஉள்ளனர். இதனால் அவசரகாலச் சட்டத்தை இந்தத் தடவை நீடிப்பது கேள்விக்குரியதாகி இருப்பதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை தோற்கடிக்கப்பட்டால் பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம் என்பன வழக்கிழந்துவிடும். இதனால் அரசு பெரும் பாதுகாப்பு நெருக்கடிக்குள் சிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# பொது அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 26
யாழ். கல்வி வலயமட்ட கணித, விஞ்ஞான பொது அறிவுப்போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கல்வி வலயத்தின் 3 பாடசாலைகளில் நடைபெறும்.

கோப்பாய் கல்விக் கோட்டப் போட்டிகள் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும், நல்லூர் கல்விக் கோட்டப் போட்டிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும், யாழ். கல்விக் கோட்டப் போட்டிகள் வேம்படி மகளிர் கல்லூரியிலும் நடைபெறும் என்று யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

தரம் 6 தொடக்கம் 8வரை ஒரு பிரிவாகவும், தரம் 9 தொடக்கம் 11வரை அடுத்த பிரிவாகவும் தரம் 12 தொடக்கம் 13வரை மற்றைய பிரிவாகவும் போட்டிகள் நடைபெறும்.

3கோட்டங்களின் பாடசாலைகளையும் சேர்ந்த தரம் 12, 13 மாணவர்களுக்கான போட்டி வேம்படி மகளிர் கல்லூரியில் மட்டுமே நடைபெறும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மற்றைய இரண்டு பிரிவுகளுக்கான போட்டிகள் மேற்குறிப்பிடப்பட்ட பாடசாலைகளில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

# சமய சந்நிதிகளில்

மேலைப்புலோலி தம்பசிட்டி ஸ்ரீ மகாமாரி அம்பாள் (பண்டாரி அம்மன்) கோயில் மணவாளக்கோல திவ்வியப் பெருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும்.

இவ்விழாவின் போது 1008 சங்குக்ளிலான சகஸ்ர சங்காபிஷேகம் இடம்பெறும்.

நல்லை ஆதீன சிவாச்சாரியார் சிவாகம விஸ்வத்ஜோதி சிவஸ்ரீ து. கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் இப்பெருவிழாவை நடத்தி வைப்பார் (க-173)

★ ★ ★

நீர்வேலி கந்தசுவாமி கோயிலின் ஆனி உத்தர திருமஞ்சன விழா நாளை ,புதன் கிழமை மாலை 4.30மணிக்கு நடைபெறும்.

மறுநாள் வியாழக்கிழமை காலை 6 மணிக்கு நடராஜப் பெருமானுக்கு விசேட அபிஷேகமும் அதன்பின் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க-17)

★ ★ ★

நவாலி, அட்டகிரி முருகன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்றுத் திங்சட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை பகல் 11 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க-10-185)

★ ★ ★

கைதடி வடக்கு கயிற்றசிட்டி கந்தசுவாமி கோயிலில் வருடாந்த உற்சவத்துக்குப் பதிலாக இன்று தொடக்கம் பத்து நாள்களுக்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. [க-5]

★ ★ ★

கரவெட்டி, தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். [க-10]

# சத்துணவு வழங்க குழு நியமிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26
வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு — கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சினால் யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை, மாணவர்களில் சத்துணவு பெற்றுக்கொள்ளத் தகுதியான மாணவர்களைத் தெரிவதற்குரிய குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக 9 ஆயிரம் மாணவர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் சத்துணவு வழங்கப்படவுள்ளதால், சத்துணவுக் குறைபாட்டால் பாதிக்கப்பட்ட மாணவர்களை சரியாகத்தெரிவு செய்வதற்கு இக்குழு அமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வலயம் அல்லது கோட்ட மட்டத்தில் மாணவர்கள் தெரிவு செய்வதற்கு பிரதேச செயலர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அதிகாரிகள், அதிபர்கள், பெற்றோர் பிரதிநிதிகள், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி இணைப்பாளர்கள், பொதுச் சௌக்கிய அதிகாரி, அமைச்சரின் நேரடிப் பிரதிநிதிகள் ஆகியோர் கொண்ட குழு அமைக்கப்படவுள்ளது.

ஏற்கனவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு சத்துணவு பெறத் தகுதியுடையவர்களது பெயர்ப்பட்டியல் அனுப்பப்பட்டிருப்பினும், இப்பெயர் பட்டியல் திருப்திகரமாக இல்லாத காரணத்தினால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாதிக்கப்பட்ட மாணவர்களை உள்ளடக்கிய புதிய பெயர்ப்பட்டியலை தயாரிக்கும்படி அமைச்சு அதிகாரிகளுக்கு பணித்துள்ளார் — என்று ஈ.பி.டி.பி. செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வடமராட்சிப் பிரதேசத்துக்கான

# தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் மாலிசந்தியில்

தென்மராட்சி, ஜூன் 26
வடமராட்சி பிரதேசத்திற்கான தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் நேற்று முன்தினம் வைபவ ரீதியாக வலயம் மூன்றின் பிராந்தியத் தலைவர் எஸ். கனகசூரியரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மந்திகை ஆஸ்பத்திரியில் இயங்கி வந்த தொலைபேசி பரிவர்த்தனை நிலையம், மாலிச் சந்தியில் புனரமைக்கப்பட்ட நிலையக் கட்டடத்தில் தற்போது இயங்கத் தொடங்கியுள்ளது.

திறப்பு விழாவில் யாழ். மாவட்ட முகாமையாளர் அன்ரன்ராஜா உட்பட வடமராட்சி தொலைபேசி பாவனையாளர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

பரிவர்த்தனை நிலையம் இடம்மாற்றப்பட்டதால் கடந்த இரு தினங்களாக வடமராட்சிப் பகுதிக்கான தொலைபேசிச் சேவைகள் இயங்காதிருந்தன. தற்போது நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளன,

# கைதடியில் குடியமர்வோருக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜூன் 26
கைதடியில் மீளக் குடியமர்ந்தவர்கள் மற்றும் குடியமரத் தயார் நிலையில் உள்ளவர்களுக்கு 5ஆயிரம் ரூபாகொடுப்பனவை வழங்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தரவிட்டார்.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு—கிழக்கு தமிழ் விவகார அமைச்சு அலுவலகத்தில் நேற்று கைதடி மீள் குடியமர்வு தொடர்பான கூட்டம் நடைபெற்றது.

இச்கூட்டத்துக்கு தலைமை வகித்து உரையாற்றும் போதே அவர் இந்த உத்தரவை விடுத்தார்.

மீளக் குடியமர்பவர்களுக்கு மூன்று மாதத்து இரட்டிப்பு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்றும்—

கைதடி—கோப்பாய் வீதியில் குண்டுத் தாக்குதல்களினால் ஏற்பட்ட பாரியகிடங்குகளைப் பத்து நாள்களில் நிரப்பி வீதியை புனரமைக்குமாறும் அவர் தெரிவித்தார். (ஐ-5)

# பாடசாலைக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 26
யாழ். இந்து ஆரம்ப மகளிர் பாடசாலையில் புதிய இருமாடிக் கட்டடம் அமைப்பதற்கு, முதற்கட்டமாகப் 10 லட்சம் ரூபாவினை வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கியுள்ளார்.

யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் அதிபர் ரி.ஏ. துரைசிங்கம், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் பாடசாலையில் புதிய கட்டடம் அமைப்பதற்கு நிதியுதவி கோரி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

# காவலில் இருந்த அதிகாரி மரணம் இராணுவப் பொலீஸார் நால்வர் கைது

## கொலன்வெலவில் சம்பவம்

கொழும்பு, ஜூன் 26
இராணுவப் பொலீஸாரின் காவலில் இருந்த இலங்கை இராணுவத்தின் விசேட படையணி அதிகாரி ஒருவர் மரணமடைந்தது தொடர்பாக இராணுவப் பொலீஸார் நால்வரைத் தாங்கள் கைது செய்துள்ளதாக மகாவெலப் பொலீஸார் அறிவித்தனர்.

விசேட படையணியின் கொலன்வெல முகாமில் தானியங்கி 'பிஸ்ரல்' துப்பாக்கிகள் நான்கு திருட்டுப்போனமை தொடர்பாகக் காவலில் வைக்கப்பட்ட அதிகாரி இறந்தது தொடர்பாகவே 4இராணுவப் பொலீஸாரும் கைதுசெய்யப்பட்டனர்.

சில வாரங்களுக்கு முன்னர் கொலன்வெல முகாமிலிருந்து 4 துப்பாக்கிகள் காணாமல் போனது குறித்து விசாரணை நடத்த நாரஹன்பிட்டிய இராணுவப் பொலீஸ் தலைமையகத்திலிருந்து வந்திருந்த 4 இராணுவப் பொலீஸாரும், சம்பந்தப்பட்ட அதிகாரியை விசாரித்ததாகவும்—

கடந்த புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட தீவிர விசாரணைகளின் போது, அதிகாரி நிலைகுலைந்ததையடுத்து, அவர் நாவல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும்— அங்கு அவர் உயிரிழந்ததாகவும் பொலீஸார் தெரிவித்தனர். (ஒ)

உதயன்

## யதார்த்தம் உணர்த்தும் வரலாற்றுப் பாடம்

★ தொடரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் திணறும் அரசு, ஆயுதக் கொள்வனவுகள் தொடர்பான சகல கொடுப்பனவுகளையும் வழங்காமல் இடைநிறுத்தி வைக்க முடிவுசெய்திருக்கின்றது. இது பற்றிய விவரம் அரசினால் முப்படைகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது.

★ யுத்தத்தில் அரசுப் படைகளுக்கு ஏற்பட்டுவரும் பெரும் பின்னடைவுகள் காரணமாக, புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை அவசரமாக ஆரம்பிக்கும் தெரிவைத் தவிர, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு வேறு வழிகள் ஏதுமில்லை.

- கொழும்பிலிருந்து வெளியாகும் இரு முன்னணி ஆங்கில வாரப் பத்திரிகைகளில், பிரபலமான இரு இராணுவ விமர்சகர்கள் 'புட்டு' வைத்திருக்கும் தகவல்கள் இவை.

யுத்தவெறி காரணமாகப் பேச்சுக்கான கதவுகளை இறுக மூடி வைத்துவிட்டு, சிங்கள மக்கள் மத்தியில் 'தத்துவம்' பேசிக்கொண்டிருந்த இனவாத அரசியல் தலைவர்களுக்கு கள நிலைமை பற்றிய யதார்த்தம் இப்போதுதன்னும் புரியத் தொடங்கியிருக்குமா என்பது சந்தேகமே.

தமிழ்மக்களின் நியாயமான போராட்டத்தின் பின்னணிக் காரணங்களைப் புரிந்து கொள்ளாமல - புரிந்து கொள்ள முயற்சிக்காமல் - அதனை வெறும் பயங்கரவாத எழுச்சியாகக் காட்டி, தனது இராணுவப் பலத்தின் மூலம் அதனை அடக்கிவிடலாம் என்று கனவு கண்ட அரசியல் தலைவர்கள், யதார்த்தம் உணர்த்தியிருக்கும் இந்த வரலாற்றுப் பாடத்தைச் சரிவரப் புரிந்துகொண்டு இனிமேலாவது நியாயபூர்வமாக நடந்து கொள்வார்களா என்பதை வரலாறுதான் வெளிப்படுத்த வேண்டியிருக்கும்.

ஆனையிறவை வீழ்த்தி, யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்குடன் புலிகள் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு இப்போது ஒரு வருடம் ஆகிவிட்டது.

யாழ்ப்பாணத்தைப் பறிகொடுக்கும் ஆபத்து ஏற்பட்டதும் தனது சகல பொருளாதார வளங்களையும் பயன்படுத்தி, பல்வேறு நாடுகளிடமும் கையேந்திக் கடன்பட்டு, நாட்டைக் கையறு நிலைக்குள் வீழ்த்தி, ஆயுதங்களை வாங்கிக் குவித்து, புலிகளை பின்வாங்கச் செய்த அரசு, அதில் காட்டிய முனைப்பையும் வேகத்தையும் சமாதானப் பேச்சுக்கான முயற்சியில் இந்த ஒரு வருடகாலத்தில் - நேர்மையுடன் - காட்டியிருக்குமானால் இன்று அரசுக்கும் ஸ்ரீலங்கா தேசத்துக்கும் இந்த இக்கட்டுநிலை வந்திருக்காது என்பது வெள்ளிடைமலை.

"இராணுவச் செலவினத்துக்கு ஒதுக்கப்படும் பெருந்தொகை நிதி, பாரிய அளவிலான ஆயுதக் கொள்வனவு, இடைவிடாது படைக்கு ஆள்சேர்ப்பு, இடையில் விலகிய இராணுவத்தினரை மிரட்டிப் பிடித்தல் இப்படியாக இராணுவ இயந்திரத்தைப் பலப்படுத்திப் போருக்குத் தயார்படுத்தும் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது சந்திரிகா ஓர் இராணுவக் கடும்போக்காளர் என்பது புலனாகின்றது" - என்று கடந்த வருட இறுதியில் தனது மாவீரர் தின உரையில் புலிகளின் தலைவர் பிரபாகரன் குற்றம் சுமத்தியிருந்தார்.

அந்தப் போக்கு இன்று பொருளாதார ரீதியில் - இராணுவச் செயன்முறையில் - எத்தகைய இக்கட்டுக்கு வழி செய்திருக்கின்றது என்பதை இப்போது - காலம் பிந்தியாவது - உணர்ந்து கொண்டு, நியாயமான தீர்வுக்கு இணங்கும் தன்மையை ஜனாதிபதியும் அவரது அரசும் கடைப்பிடித்தால் இந்த இரு தசாப்தகால இனப்போருக்கு முடிவு கட்டிவிடலாம்.

# வன்னி மக்களுக்கு விமோசனம் கிடைக்க உதவவேண்டும்

## வடபிராந்திய இந்துப்பேரவை மகஜர்

யாழ்ப்பாணம்,ஜூன்26

வன்னிப்பகுதி மீதான பொருளாதாரத் தடை நீக்கப்பட்டு வன்னி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விமோசனம் கிடைக்க உதவவேண்டும்.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை வடபிராந்திய இந்துப் பேரவையினர் அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்த சர்வமதக் குழுவிடம் சமர்ப்பித்துள்ளனர்.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது சகோதரர்களான வன்னிவாழ் மக்கள் பொருளாதாரத் தடை காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே வன்னி மக்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த சர்வமதக் குழுவினர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

யாழ்.குடாநாட்டு மக்கள் தென்னிலங்கைக்குச் சென்று வருவதற்கு வசதியாக நடைமுறையில் உள்ள பாதுகாப்பு அனுமதிபெறும் முறை நீக்கப்பட வேண்டும் என்று அதில் உள்ளது. (க-7)

## 'சபாநாயகரின் முடிவை நீதிமன்றுக்கு அறிவிக்க தேவை ஏதுமில்லை'

கொழும்பு,ஜூன்26

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணையை விசாரிப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிப்பது தொடர்பாக உயர் நீதிமன்றம் விடுத்த தடை உத்தரவை சபாநாயகர் நிராகரித்தது தொடர்பான அறிவித்தலை -

உயர் நீதிமன்றத்துக்கு அறிவிக்க நாடாளுமன்றம் கட்டுப்பட்டிருக்கவில்லை என்று நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணிமனையைச் சேர்ந்த மூத்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் எடுக்கும் முடிவை உயர் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டிய கடப்பாடு எதுவும் நாடாளுமன்றத்திற்கு இல்லை எனவும் இவ்வாறான ஒரு பிரச்சினை உருவாகும் வேளையில் அதை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் எனச் சட்டத்தில் எந்தவோர் இடத்திலும் கூறப்படவில்லை எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (க)

## நாட்டு நடப்பு

நல்லூரான் திருவிழாவை நாடி
நாரதரும் புறப்பட்டார் ஓடி
எல்லா இடமும் சென்றி தேடி
ஏது வழி என்றாரே வாடி
"நில்! ஓய்! எங்கே போறே?" என வினவ
நீல மயில் வாகனனிடம் என்றார்
"இல்லை ஐய்யா அவன் அங்கு இல்லை
இரண்டு வாரம் கொழும்பு போச்சி!" என்றான்.

*- விகடகவி -*

# அரசையும் ஐ.தே.கவையும் மண்டியிடவைக்கும் ஜே.வி.பியின் புத்திசாதுரியமான விளையாட்டு

## தற்போதைய நிலைமை குறித்து அரசியல் ஆய்வாளர்கள் கருத்து

கொழும்பு,ஜூன்26

அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதம் இடம்பெற்று வாக்கெடுப்பு நடைபெறும் போதே தான் ஆதரித்து வாக்களிக்குமா? அல்லது எதிர்த்து வாக்களிக்குமா என்பதுபற்றிய முடிவு தெரியவரும் என்று மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) ஞாயிற்றுக்கிழமை அறிவித்திருப்பது அரசாங்கத்தையும் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவையும் தன் முன்னால் மண்டியிடவைக்கும் புத்திசாதுரியமான விளையாட்டு என்று அரசியல் ஆய்வாளர்களும் இராஜதந்திரிகளும் தெரிவித்தனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கம் பதவி கவிழ்க்கப்பட வேண்டும் என்பதில் சந்தேகம் இல்லை எனத் தெரிவித்திருக்கும் அக்கட்சி அதேசமயம் ஐ.தே.க.வின் கடந்தகால ஆட்சியையும் கண்டித்திருக்கிறது.

அதேசமயம், சுயாதீனமான பொலஸ், அரச சேவை, அரச ஊடக, நதித்துறை தேர்தல் ஆணைக் குழுக்களை அமைப்பதாக திருமதி குமாரதுங்க முன்னர் அளித்திருந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற இன்னும் காலம் கடந்துவிடவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறது.

இதேவேளை ஜனநாயக ரீதியான மறுசீரமைப்புத் தேவையின் அவசியம் குறித்து ஐ.தே.க. பேசுவதும் நல்ல சகுனம் என்றும் ஜே.வி.பி. குறிப்பிட்டுள்ளது.

ஆட்சியைத் தக்கவைக்க பிரயத்தனப்படும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், எதிரணிக் கட்சிகளுடன் சேர்ந்து ஆட்சியமைக்கக் கடுமையாக முயற்சிக்கும் ஐ.தே.கவிற்கும் பிடி கொடுக்காமல் காய் நகர்த்துதலில் ஜே.வி.பி. ஈடுபட்டுள்ளதாக அரசியல் இராஜதந்திரி ஒருவர் கூறினார்.

ஜே.வி.பியினருக்கு எதிரான பிரசாரத்தை உடனடியாக நிறுத்தி இரக்கம் காட்டுமாறு இரந்து கேட்க வேண்டிய நிலைமை பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆளுங் கட்சியைப் பதவி அகற்றும் நடவடிக்கையில் ஜே.வி.பி. தனக்கு ஆதரவளிக்கிறது என்று ஐ.தே.க. உறுதியாக வெளிப்படுத்தினாலேயே அரசதரப்பிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தனது தரப்புக்கு இழுத்தெடுக்க முடியும். ஆனால் அதற்கு இடங்கொடாத வகையில் ஜே.வி.பி. நடந்துகொள்கிறது.

"ஒருவருக்கும் நாம் ஆதரவளிக்கப்போவதில்லையென ஜே.வி.பி அறிவித்திருந்தால் எதிரணியின் நம்பிக்கை யாவும் சிதறடிக்கப்பட்டிருக்கும். ஆனால் ஜே.வி.பி. தனது நிபந்தனைகளை அதிகரித்துள்ளது என்பதே உண்மை" என ஐ.தே.க. உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். ஜே.வி.பியின் இந்த அறிவிப்பு இரு சாராரினதும் எதிர்ப்புகளை மேலும் மேலும் அதிகரிக்கச் செய்வதாகவே அமைந்துள்ளது.

### பிரதமர் நம்பிக்கை

இது இவ்வாறிருக்க ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியை எவராலும் அசைக்க முடியாது எனப் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார். அரசாங்கம் அரசமைப்பின் பிரகாரம் நடந்துகொள்ளும் எனவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். (க)

# இலங்கையில் தற்கொலை வீதம் படிப்படியாகக் குறைந்து வருகிறது

## 10 ஆண்டுகளில் 75 ஆயிரம் பேர் மரணம்

கொழும்பு,ஜூன்26

கடந்த 10 ஆண்டுகளில் நாடெங்கிலும் தற்கொலை மேற்கொண்டோரின் வீதம் படிப்படியாகக் குறைந்துள்ளது எனப் பொலீஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1995இல் 8,510 பேர் தற்கொலை புரிந்துள்ளனர். ஆனால் 2000ஆம் ஆண்டில் தற்கொலை புரிந்தோரின் எண்ணிக்கை 5,412ஆகக் குறைந்துள்ளது.

1995இல் 8,510 பேரும் 1996இல் 7,142 பேரும் 1997இல் 6,418 பேரும் 1998இல் 5,830 பேரும் 1999இல் 5,907 பேரும் 2000இல் 5,412 பேரும் தற்கொலை புரிந்துள்ளனர்.

1990-2000 காலப் பகுதியில் நாட்டில் மொத்தமாக 75,783பேர் தற்கொலை செய்துள்ளனர். இவர்களில் 18,713 பெண்களும் 57,070 ஆண்களும் அடங்குவர். (க)

## நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்து

# பொ.ஐ.மு. ஆட்சியைத் தொடரும் என்கிறார் அமைச்சர் அலவி

கொழும்பு,ஜூன்26

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒரு போதும் வெற்றியடையப் போவதிலலை. நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்து பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியைத் தொடரும் என்றும் தொழில் அமைச்சர் அலவி மௌலானா தெரிவித்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அரசாங்கத்துக்கு உடனடியாகப் பிரச்சினை எதுவும் இல்லை. ஜே.வி.பியினர் இருபக்கமும் வாக்களிக்க மாட்டார்கள் என்பதையே அவர்களது நிலைப்பாடு எடுத்துக்காட்டுகின்றது என்றும் அவர் கூறினார்.

ரவூப் ஹக்கீமின் செயற்பாட்டினால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்தான் பாதிக்கப்பட்டுள்ளது. அவரது முடிவினால் கட்சி இரண்டாகப் பிரிந்து காணப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்ளவர்களுக்கும் அரசுக்கு ஆதரவு தர முன்வரலாம். எனவே நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அரசாங்கம வெற்றிபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

# நம்பிக்கையில்லாப் பிரேரணையில் முஸ்லிம் காங்கிரஸின் நிலை என்ன?

## இறுதி நேரத்தில் முடிவு என்கிறார் ஹக்கீம்

கொழும்பு,ஜூன்26

தேசிய பிரச்சினை தொடர்பாகவும் முஸ்லிம் காங்கிரஸின் கொள்கை தொடர்பாகவும் இரு பிரதான கட்சிகளும் எடுக்கும் நடவடிக்கைகளைப் பொறுத்தே அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் எவ்வாறு வாக்களிப்பது என்பது குறித்து கடைசி நேரத்தில் முஸ்லிம் காங்கிரஸ் முடிவு எடுக்கும்.

- இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து அவரது நிலைப்பாடு என்ன என்று வினவிய போதே ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பதவியை ஏற்குமாறு பேரியல் அஷ்ரப்புக்கு இம்மாதம் 18ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டத்தல் தெரிவித்தேன். அதனைவிட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் பீட உறுப்பினர்களும் அவருக்கு இதனை அறிவித்துள்ளனர். கட்சியின் செயலாளரும் அறிவித்துள்ளார் என்றும் ஹக்கீம் தெரிவித்தார்.

தவிசாளர் பதவியை ஏற்குமாறு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்று பேரியல் கூறுவது தவறானது.

இன ஒற்றுமைக்குக் குந்தகமாக இருந்தமையினால் என்னைப் பதவியில் இருந்து விலக்கியதாக ஜனாதிபதி கூறியுள்ளமை எனக்குக் கவலையளிக்கின்றது.

சிறுபான்மையினருக்கு எதிரான நடவடிக்கையை மேற்கொண்ட அமைச்சர்களை அமைச்சரவையில் தொடர்ந்து வைத்திருக்கும் ஜனாதிபதியின் செயல் வேடிக்கையானது என்றும் ஹக்கீம் கூறியுள்ளார். (க)


## நாளை

ஆனி 13
புதன்கிழமை
திதி: ஸப்தமி
பின் இரவு 2.23 வரை.
நட்சத்திரம்: பூரம்
முற்பகல் 10.13 வரை.
சுபநேரம் : 4.25 - 5.55
ராகுகாலம் : 11.55 - 1.25
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

எரிகின்ற விளக்காய் இரு; அப்போதுதான் மற்ற விளக்குகளை ஏற்றிவைக்க முடியும்.

கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



# 25ஆவது பிறந்த நாள் வாழ்த்து

HAPPY



BIRTHDAY

## செல்வன் சிவலிங்கம் சர்மலதன்

(றூபன்)

திரு., திருமதி சிவலிங்கம் - மகேந்திராதேவி
தம்பதிகளின் செல்வப் புதல்வன்
சர்மலதன் (றூபன்)

தனது 25ஆவது பிறந்தநாளை இன்று (26-06-2001) செவ்வாய்க்கிழமை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் ஆசைத்தம்பி பிரதீஸ் (றேனு), மாமா பாலன் மற்றும் நண்பர்களுடன் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, ஆசை அக்கா செல்வி, அன்புத் தம்பிமார்- சதீஸ்வரன் மயூறதன், கிதுசன், ஆசைத் தங்கைமாரான - தர்சிகா, லக்ஷனா, டெனி, ஜயா, அம்மம்மா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமன்மார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எல்லாம் வல்ல சிவபெருமானினதும் முத்துமாரி அம்மனினதும் அருளால் பல்கலையும் பெற்று சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
*93/9, இராசாவின்தோட்டம் வீதி,* **அ.சிவலிங்கம் *(சந்திரன்)***
*யாழ்ப்பாணம்.* (89426) தகப்பன்

# அவசர ஒன்றுகூடல்

இலங்கை மின்சாரசபைப் பயிலுநர்கள் அனைவரையும் நாளை (27.06.2001) புதன்கிழமை காலை 8.30 மணிக்கு மாண்புமிகு அமைச்சரான திரு.கே. என். டக்ளஸ் தேவானந்தா அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடுமுகமாக யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் ஒன்றுகூடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்

இ.தேவராஜன்
*-உபதலைவர்-*

*இலங்கை மின்சார சபை*
*பயிலுநர் சங்கம்.* (89427)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மனம் மகிழ
11
-
12
-
1928



மனம நெகிழ
27
-
05
-
2001

## திருமதி தங்கரத்தினம் மார்க்கண்டு

பாசத்தின் திருவுருவமே! எம்
குடும்பத்தின் ஒளிவிளக்கே!
அன்புடன் எம்மை அரவணைத்துப்
பாசத்துடன் எம்மை வளர்த்து ஆளாக்கி
எங்கள் இதயங்களில் குடியிருக்கும்
அன்புத் தெய்வமே!
வார்த்தை ஒன்று கூடச் சொல்லாமல்
எம்மைவிட்டுப் பறந்தோடிச்
சென்ற தெங்கே?
உங்கள் நினைவுகள்
எங்களை விட்டு ஒருபோதும் அகலாது!
என்றும் உங்கள் நினைவுடன்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் மார்க்கண்டு அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும் இன்று (26.06.2001) செவ்வாய்க்கிழமை நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள், யாவரும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்திப்பதோடு, மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
*நீதிமன்ற வீதி,* **மக்கள், மருமக்கள்,**
*மல்லாகம்.* (89416) **பேரப்பிள்ளைகள்.**

## பிராண்பற்று உபதபால் அலுவலகத்தை திறக்கக் கோரிக்கை

நீண்ட காலமாக மூடப்பட்டிருக்கும் பிரான்பற்று உபதபால் அலுவலகத்தை, இக் கிராம மக்களின் நலன் கருதி மீண்டும் திறந்து இயங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 1984ஆம் ஆண்டில் இந்த உபதபால் அலுவலகம் மூடப்பட்டது. இதனால் இக்கிராம மக்கள் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவது, பதிவுத் தபால் அனுப்புவது, முத்திரைகள் பெறுவது ஆகிய தேவைகளுக்கு தூரத்திலுள்ள பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்திற்கே சென்று வரவேண்டி உள்ளது..

ஆகவே விரைவில் இந்த உபதபால் அலுவலகத்தைத் திறந்து இயங்கச் செய்ய வேண்டும் என்று யாழ். மாவட்ட தபால் சேவை அத்தியட்சகருக்கு மேற்படி சங்கம் அண்மையில் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. (க-135)

## கொழும்புத்துறை ஆலயத்தில் மீண்டும் பூஜை வழிபாடு

கொழும்புத்துறை ஆனந்தன் வடலிப்பகுதியில் உள்ள புனித செபமாலை அன்னை ஆலயத்தில் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

ஆலய பங்குத் தந்தை அருட்திரு. சாள்ஸ் கொலின் தலைமையில நடபெற்ற ஆராதனை நிகழ்வில் இப்பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

இதேசமயம் இந்த ஆலயத்தின் ஆடிப்பெருநாளை அடுத்த மாதம் 2ஆம் திகதி கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை பங்குமக்கள் மேற்கொண்டு வருகின்றனர். (-17)

## மீள்நியமனக் கடிதம் இன்னும் இல்லை

பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகளுக்கு மீள்நியமனக் கடிதம் 9மாதங்கள் முடிவுற்ற நிலையிலும், மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவினால அனுப்பி வைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் தற்போது வேதனமின்றி கடமையாற்றி வரும் 14 பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகளுக்கான மீள்நியமனத்திற்கு சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப்பணிப்பாளர் ஊடாக விண்ணப்பித்தவர்களுக்கே இதுவரை நியமனக் கடிதங்கள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (க-185)

உ
சிவமயம்



# காரைநகர் சிவன் கோயில்

ஈழத்துச் சிதம்பரம்

## ஆனி உத்தரவிழா விஞ்ஞாபனம்

விஷு வருடம் ஆனி மாதம் 13ஆம் நாள் புதன் கிழமை (27-06-2001) இரவு (அதிகாலை) 3 மணிக்கு நடேசர் அபிஷேகம் ஆரம்பமாகித் தொடர்ந்து 14ஆம் நாள் (28-06-2001) வியாழக்கிழமை உதயத்தில் நடேசர் ஆனி உத்தர தரிசனம். மாலை 3 மணியளவில் நடேசர் திருவீதி உலா உற்சவம் நடைபெறும்.

*ஆதீன கர்த்தாக்கள்.*

(89399)

# சேவைநலன் பாராட்டி நன்றி நவிலல்



எமது பிரதேசத்தின் கடற்றொழிலாளர் அபிவிருத்தி அமைப்புக்களையும், கூட்டுறவுச் சங்கங்களையும் அமைப்பதற்கும ,சீரிய வகையில் செயல்படுத்துவதற்கும், அரச சார்பற்ற நிறுவனங்களில் உதவிகளைப் பெறுவதற்கும் காரணகர்த்தாவாகவும், ஊன்றுகோலாகவும் சேவையாற்றி வழியமைத்து எமது சங்கத்தை கிராமிய கடற்றொழில் வங்கியாகத் தரம்உயர்த்த, தகுதிகாண் நிலைக்குக் கொண்டுவர தன்னலமற்ற சேவைகளை எமக்கு வழங்கிய

## லயன் சோமசுந்தரம் விக்னேஸ்வரன்

(பிராந்திய கடற்றொழில் பரிசோதகர்)

அவர்கள் எமது பிரதேசத்திலிருந்து தீவகம் பிரதேசத்திற்கு இடம் மாற்றப்பட்டாலும், அவரது தன்னலமற்ற அளப்பரிய சேவைகளை நாம் மறந்து விடாது அவரைப் பாராட்டி நன்றியுடன் வாழ்த்தி அவரின் சேவைகள் மென்மேலும் மீனவ சமூகத்துக்குக் கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'நன்றி மறப்பது நன்றன்று'

*அராலி கிழக்கு -தெற்கு ஐயனார்*
*கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்*
அராலி.
(89415)

ஓம் விராட் விஷ்வப் பிரம்மனே நம.

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் ஆனிமாதம் 13ஆம் நாள்(27-06-2001) புதன்கிழமை முற்பகல் 10-17 மணி முதல் 11-18 மணி வரை வரும் சிங்க லக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**சிறீரஞ்சன்(ரஞ்சன்)**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**சுஜீந்தினி(பபிலா)**
அவர்களுக்கும்

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் (நாச்சிமார்கோயில்) ஆலயத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம் 28-06-2001 வியாழக்கிழமை பிற்பகல் 4.00மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

**தங்கள் நல்வரவை நாடும்:**

**திருமதி சுந்தரலிங்கம் பஞ்சரதம்**
(சின்னமணி பத்தர்)
*காரைக்காடுவீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

***வரவேற்பாளர்கள்:-***
***மைத்துனர்கள்***
சு.நாகராசா தம்பதிகள்
வ.சண்முகராசா தம்பதிகள்
செ.சகாயராசா தம்பதிகள்
செ.ரவீந்திரன் தம்பதிகள் (ரொபி)

**திரு. திருமதி பஞ்சாட்சரம் சாந்தலட்சுமி**
*நாவற்குழி கிழக்கு, கேரதீவு வீதி.*
தற்காலிக முகவரி:-
*பழைய தபாற்கந்தோர் வீதி,*
*கொக்குவில் கிழக்கு.*

***வரவேற்பாளர்கள்:-***
***மருமக்கள்***
ச.சிறீதரன் தம்பதிகள்
க.மகேஸ்வரன் தம்பதிகள்

**(இருவீட்டார் அழைப்பு)** (89271)

# மனித நாகரிக வளர்ச்சியை முந்திச் செல்லும் மது பாவனை!

மனித நாகரிகமும் அறிவியலும் வளர வளர மதுவின் வகைகளிலும் பாவனையிலும் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டது. இதனால் மனிதன் மதுவுக்கு அடிமையாவதும் அழிவதும் அதிகரிக்கின்றது. இலங்கையைப் பொறுத்த அளவிலும் மதுப்பாவனை அதிகரித்தே வருகின்றது. யாழ்.குடாநாட்டைப் பொறுத்த அளவில் அண்மைக் காலமாக மதுப்பாவனை மிக அதிகரித்துக் காணப்படுகின்றது. அதிக மதுபானக் கடைகளும் தவறணைகளும் திறக்கப்படுவதே இதற்குச் சான்றாகும்.

ஈதைல் அற்ககோல் (Ethyl alcohol) எனப்படும் இரசாயனப் பதார்த்தம் எல்லா மதுவகைகளிலும் முக்கியமாகக் காணப்படும். இது மதுவகைகளில் வெவ்வேறு செறிவுகளில் காணப்படும். இதுவே 'அற்ககோல்' அல்லது மது என அழைக்கப்படுகிறது; மனிதனில் 'இன்ப', 'துன்ப' விளைவுகளை ஏற்படுத்துகிறது.




ஈதைல் அற்ககோல் தவிர அற்ககோலில் பல வகைகள் உண்டு. இவற்றுள் குறிப்பாக மீதைல் அற்ககோலைக் குறிப்பிடலாம். (Methyl alcohol) இது நச்சுத் தன்மை உடையது. யாழ்ப்பாணத்தில் இப்போது பரவலாகத் தயாரிக்கப்படும் கள்ளச் சாராயமான 'கசிப்பு' என்ற குடிவகையில் மீதைல் அற்ககோல் வேறுபட்ட செறிவுகளில் காணப்படும். இது உள்ளெடுக்கப்படும் போது உடலில் பாரிய விளைவுகளையும் தாக்கங்களையும் ஏற்படுத்தும்.

'கசிப்பு' பாவனையால் பலர் கண்களை இழந்துள்ளனர். மீதைல் அற்ககோல் செறிவு அதிகமாக இருக்கும் போது பலர் இறந்துள்ளனர். இந்தியாவில் இவ்வாறு தயாரிக்கப்பட்ட சாராயத்தைக் குடித்து ஒரு கிராமமே அழிந்திருக்கிறது. ஆண்கள், பெண்கள் என அவ்வளவு பேருமே இறந்துள்ளனர். கசிப்பு உடலைச் சிதைத்துவிடும்.

மது மனிதனின் நரம்புத் தொகுதியில் விளைவுகளை ஏற்படுத்துகிறது. மூளை அதிகளவு பாதிக்கப்படுகிறது. குருதியில் மதுவின் அளவு 50 மில்லிக்கிராம் அளவில் இருக்கும் போது, மனோ நிலையிலும், நடத்தையிலும் முதலில் மாற்றம் ஏற்படுகிறது. அப்போது மனத்தடைகள் விடுவிக்கப்படுகின்றது. மேலும் மதுவின் அளவு அதிகரிக்க மூளையின் பல தொழிற்பாடுகள் பாதிக்கப்படும். வாகனம் ஓட்டும் திறமை 30 மில்லிக்கிராம் இருக்கும் போதே பாதிக்கப்பட்டு விடும்.

### விலங்கு இயல்பை வெளிப்படுத்தும் மது

மது மூளையின் உயர் மையத்தின் செயற்பாட்டைப் பாதிக்கும் போது மனிதனின் விலங்கு இயல்புகள் வெளிப்படுகின்றன. சாதாரணமாக அடக்கப்பட்டிருக்கும் இயல்புகளான கோபம், விரோதம், சண்டைபிடித்தல், வெட்கம் இல்லாத் தன்மை போன்றவை எவ்வித ஒளிவு மறைவுமின்றி வெளிப்படுகின்றன.

மது ஒரு தூண்டியாகப் பயன்பட்டு மனிதனில் உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் சந்தோஷத்தையும் ஏற்படுத்துவதாகப் பலரும் நம்புகிறார்கள். ஆனால் உண்மையில் மது மனித நரம்புத் தொகுதியில் பெரும் சோர்வை ஏற்படுத்துகிறது.

மது நித்திரைக் குறைபாட்டை நீக்கும், நல்ல ஆழ்ந்த நித்திரையைத் தரும் என்றே பலரும் நினைக்கிறார்கள். ஆனால் அதிகளவில் எடுக்கும் போது நித்திரைக் குழப்பத்தையே ஏற்படுத்துகின்றது.

மது பாலுணர்ச்சியைக் கூட்டும் எனப் பலரும் நினைக்கிறார்கள். உண்மையில் மது பாலுணர்ச்சியைக் குறைக்கிறது.

### சமூகத்திற்கு ஏற்படும் பாதிப்பு

மது அருந்துபவர் சமூக வரம்புகளை (Social norms) மீறுவதால் பல பிரச்சினைகளும் சிக்கல்களும் ஏற்படுகின்றன. மது அருந்துவோர் தெருவில் கூடியிருந்து கேலி பேசுவதாலும், கூடாத வார்த்தைகள் சொல்வதாலும், மாணவிகள், இளம் பெண்கள் தெருவில் போகமுடிவதில்லை. அவர்கள் அயலவருடன் சண்டை பிடிக்கிறார்கள், வீடுகளுக்கு கல் எறிகிறார்கள், ஊரடங்கு நேரங்களிலும் குடிகாரர் தெருவில் பலத்துக் கத்திக்கொண்டு செல்வதால் மாணவர்கள் படிக்க முடிவதில்லை. இவ்வாறான செய்திகள் அண்மைக் காலமாக 'உதயனில்' வெளிவந்து கொண்டிருப்பதைப் பலரும் பார்த்திருப்பார்கள். இவ்வாறான வேண்டாத செயற்பாடுகளே சமூகத்திற்கு ஏற்படும் பாதிப்புக்கு உதாரணங்களாகும்.

### குடும்பத்தில் ஏற்படும் பாதிப்பு


குடிப்பவரால் குடும்பத்திலுள்ள அனைவருக்குமே பிரச்சினை ஏற்படுகிறது. அவரே ஒரு பிரச்சினையாக இருப்பார். பிள்ளைகள் படிக்க முடியாத சூழ்நிலை இருக்கும். அவர்களின் படிப்புக்கு அவரின் உதவிகளும் கிடையாதிருக்கும். மனைவியை பிள்ளைகளை அடித்தல், துன்புறுத்தல் போன்றவை பொதுவாக நடைபெறும். மதுவினால் குடும்ப முறிவுகள் ஏற்படுகின்றன.

மதுப்பழக்கத்தினால் இயலாத் தன்மை ஏற்பட்டு, தனது மனைவியின் கற்புத் தன்மையையே சந்தேகிப்பார். யாருடன் கதைத்தாலும் சந்தேகித்து குறுக்கு விசாரணை செய்து மனைவியைச் சித்திரவதை செய்யலாம். பெண்கள் தற்கொலை செய்ய முடிவெடுப்பதற்கு கணவனின் குடிப்பழக்கமும் ஒரு முக்கிய காரணம் என அறியப்பட்டுள்ளது.

### உளவியற் குறைபாடுகள்

அதிகளவு மது அருந்தி அடிமையானவர்களில் குறுகிய கால மறதி (Short term amnesia or memory black out) ஏற்படுவது காணப்பட்டுள்ளது. முதல் நாள் மாலையில் நடந்த நிகழ்வை மறு நாள் காலையில் நினைவுக்குக் கொண்டுவர முடியாத நிலையே குறுகிய கால மறதி ஆகும். மது அருந்துபவர்களில் 20 வீதமானவர்களுக்கு இந்த நிலை ஏற்படுகிறது.

அண்மையில் தற்கொலை முயற்சி செய்த (Attempted Suicide) ஒரு பெண்ணுக்கு உளவளத்துணை அளித்துக் கொண்டிருந்த போது, அவரது கணவர் பெரும் குடிகாரர் என்பதாகவும் அவரின் கொடுமை காரணமாகத்தான் தாங்க முடியாத நிலையில் தற்கொலை செய்துகொள்ள முயன்றதாகவும் சொனனார். அவரது கணவருடன் உரையாடிக் கொண்டு வரும் போது "உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?" என்று கேட்டோம். அவர் "ஐந்து பிள்ளைகள் என்றார். "அவர்களின் பெயர்களைச் சொல்லுங்கள்" என்றதற்கு அவர் முதல் இரண்டு பிள்ளைகளின் பெயர்களைச் சொல்லிவிட்டு "மூன்றாவது பிள்ளையின் பெயர் என்ன?" என்று யோசித்துக் கொண்டே தனது மனைவியின் பக்கம் திரும்பினார்.




அதிக அளவில் குடிப்பவர்களில் காணப்படும் இன்னுமோர் உளவியல் குறைபாடு 'டிலிரியம் றெமன்ஸ்' (Diliriumtrements - DT) எனப்படும். குழப்பமடைந்து திகிலுற்று நடுக்க முள்ளவர்களாகக் காணப்படும் நிலையை 'DT' குறிக்கிறது. இது பெரும்பாலும் மது அருந்துவதை நிறுத்தும் போது ஏற்படுகிறது. இது போலவே ஒதுங்கல் அறிகுறிகளும் (Withdrawal Symptoms) மதுவை நிறுத்தும்போது ஏற்படுகிறது. இவற்றுக்குத் தகுந்த மருத்துவ உதவியை வைத்திய நிபுணர் அளிப்பார். (இவற்றுக்கு மருந்து திரும்பவும் மது எடுப்பது அல்ல.)

### உடலில் ஏற்படும் பாதிப்பு

மது உடலில் எல்லா அங்கங்களையும் பாதிக்கும். போசனைக் குறைபாடு, நோய் எதிர்ப்புச் சக்தி குறைதல் நோய்த் தொற்று என்பன ஏற்படலாம்.

| மதுவகை | செறிவு (அற்ககோல்) |
|---|---|
| கள் | 2-4% |
| பியர் | 4-6% |
| வைன் | 8-20% |
| சாராயம் | 32-35% |
| ஜின் | 37-40% |
| விஸ்க்கி | 37-40% |
| வொட்கா | 37.5% |
| றம் | 40% |
| பிரண்டி | 40% |

முக்கியமாக ஈரல் பாதிக்கப்படுகிறது. 'சிரோசிஸ்' (Cirrhosis) என்னும் நோய் ஏற்படுகிறது. நீண்ட காலம் குடிப்பவருக்கு சிரோசிஸ் ஏற்பட்டு ஈரல் சுருக்கமடைந்து கடினமாகி, கருகி தனது முக்கியமான பல தொழிற்பாடுகளை இழக்கும். இதனாலும் உலகில் பல மரணங்கள் ஏற்படுகின்றன.

இர. சந்திரசேகரசர்மா
*திட்ட இணைப்பாளர்*
*சமூக உளநல நிகழ்ச்சித்திட்டம் TPO*

பிரசாரங்களின் மூலம் மக்கள் மத்தியில் குடியினால் வரும் கேடுகள் பற்றிய அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடத்துதல். மாணவர்களுக்கும் அடிக்கடி குடிபோதையினால் ஏற்படும் துன்பங்கள் பற்றி முன்னதாகத் தகவல்களை அளித்தல் வேண்டும்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் வேறு நோய்களுக்காகச் சேர்க்கப்படும் நோயாளிகள் குடிக்கு அடிமையானவர்கள் எனக் காணப்பட்டால், வைத்தியர்கள் அவர்களை உளநல சிகிச்சைப் பகுதிக்கு ஆலோசனைக்காக அனுப்புகிறார்கள். அங்கு அவர்களின் விவரம், குடும்பநிலை, வருமானம், குடியில் செலவழிக்கும் பணம் போன்றவை பற்றிக் கலந்துரையடப்பட்டு குடியை விட விருப்பமா எனவும் அறியப்படும். வைத்திய நிபுணரின் ஆலோசனையோடு ஒதுங்கல் அறிகுறிகளுக்கு உரிய சிகிச்சை செய்யப்பட்டு அவரைக் குடிபோதையிலிருந்து மீட்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. யாழ்.பல்கலைக்கழக வைத்தியத்துறையின் இந்த உளநலப்பகுதி உளநலத்துறைத் தலைவர், பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்களின் மேற்பார்வையின் கீழ் நடைபெறுகிறது.

குடியை விட விரும்புபவர்களும் விட்டவர்களும் ஒவ்வொரு வியாழக் கிழமை காலை நேரத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள இந்த உளநலப் பகுதிக்கு வருகிறார்கள். அங்கு அவர்களுக்கு குழுச் சிகிச்சை (Group therapy) அளிக்கப்படுகிறது. குடியை விட்டவர்கள் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள். அவர்களைப் பார்த்து மற்றவர்களும் குடியை விடுகிறார்கள்.

எனவே பெரியோர்களே பட்ட துன்பங்களை யோசித்து, குடியை விட விரும்பினால் உடனேயே வைத்திய ஆலோசனையுடன் முற்றாக நிறுத்திவிட வேண்டும். "கொஞ்சம் கொஞ்சமாக நிறுத்துவோம்" என்று நினைப்பது நடக்காத காரியம். 'கொஞ்சம்' என்பது ஓர் அளவல்ல; இது ஆளுக்கு ஆள் வேறுபடும். முற்றாகக் குடியை விட விரும்புபவர்களும் விட்டவர்களும் குழுச் சிகிச்சையில் இணைந்து பயன் பெறலாம்; பயன்படலாம்.



குடிக்கு அடிமையானவர்கள் தாங்களாகவே அதனை விட்டொழித்துத் திருந்தவேண்டுமென்று நினைத்தால்தான் திருந்த முடியும்; யாரும் அவர்களைத் திருத்திவிடமுடியாது.

மாணவர்களே! இளைஞர்களே! நீங்கள் குடியைத் தொடங்காமல் இருப்பதே நல்லது. குடிக்கச் சொல்லித் தூண்டும் - வற்புறுத்தும் நண்பர்களை விட்டு விலகுவதே நல்லது. இந்த நட்பு [illegible] பயனற்றது. குடி, போதைப் பொருள்களினால் (Drugs) வரும் தீமைகளைப் பற்றிய வேண்டிய தகவல்களைப பெற்றுக்கொள்ளுங்கள். உங்களை நல்ல பழக்கங்களில் ஈடுபடுத்திக் கொள்ளுங்கள். பொழுதைக் கல்வியிலும் மற்றும் பயனுள்ள முறைகளிலும் செலவழியுங்கள். சமயம், கலை, இலக்கியம் விளையாட்டு, எழுத்துத்துறை, பூந் தோட்டம், வீட்டுத்தோட்டம் போடுதல், வாசித்தல் போன்றவற்றில் ஈடுபடலாம்.

கட்டிளமைப் பருவத்தில் நாம் எவற்றை எண்ணுகிறோமோ, எவற்றைப் பழகுகிறோமோ அவையே வாழ்வு முழுவதும் நிலைத்து நின்று விடுகின்றது.

குடிபோதையை விடுவதற்கும் வைத்திய ஆலோசனைகள், உளவளத்துணை பெறுவதற்கும் பல இடங்களும் வசதிகளும் யாழ்ப்பாணத்தில் உள்ளன. யாழ்.போதனாவைத்திய சாலையில், சாந்திகம், தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் உள்ள உளநல சங்கம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

ஒவ்வொரு நாளையும் திட்டமிட்டு வீணே நேரத்தைப் போக்காது ஒழுங்குபடுத்தும் போது மது, போதைப்பொருள் போன்ற தீங்கான பொருள்கள் ஒருவரை நெருங்கமாட்டா. எப்போதும் நீங்கள் உங்களை ஏதாவதொரு காரியத்தில் ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். பெரிய மனிதர்களின் நூல்களை வாசிப்பதில் ஈடுபடுத்திக் கொள்ளலாம்.

"Keep yourself occupied by reading books of Great men"

*படங்கள் : நன்றி - சிரித்திரன்*

## உலக நல்லொழுக்க தினம் இன்று (WORLD TEMPERANCE DAY)

உலகம் முழுவதையும் புகை, போதை, குடிவகை அற்ற நல்லொழுக்கமுள்ள ஓர் அமைதியான சமுதாயமாக மாற்றவேண்டுமென்ற எழுச்சியை உண்டாக்கும் தினம் இன்று.

- இளைஞர்கள் புகைப்பொருள்கள், போதைவஸ்துக்கள், குடிவகைகள் போன்றவற்றை எப்போதும் தொடுவதில்லை என்ற திடசங்கற்பத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்; புகை, குடி, போதைக்கு அடிமையாகி
- விட்டவர்கள் அவற்றை முற்றாகக் கைவிட்டு அமைதியான - சுகமான வாழ்வுக்கு மீள வரவேண்டுமென்ற பிரதிக்ஞையை எடுத்துக்கொள்ள வேண்டும்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



உதிப்பு 1925 - 09 - 25

உதிர்வு 2001 - 05 - 13

### அமரர் சேனாதிராசா இராசையா

சக அபிவிருத்தித் தொண்டர்
செல்வி ஜெயந்தியின்
அன்புத் தந்தையார்
சேனாதிராசா இராசையா

அவர்களின் மறைவையிட்டு பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

தென்மீராட்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச
அபிவிருத்தித் தொண்டர்கள்,
பரிசோதகர்கள், போதனாசிரியர்கள்,
ஊழியர்கள்.

அபிவிருத்தி பயிற்சி நிலையம்,
*வதிரிச் சந்தி, நெல்லியடி.*

(C/17191)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

26-06-2001

HAPPY BIRTHDAY



**செல்வன் ந.ஜெய்மதுசன்**

மட்டுவில் தெற்கு, மணல் வீதியைச் சேர்ந்த

**நகுலேஸ்வரன் சுகிர்தராணி**

**தம்பதிகளின் அருமைப் புதல்வன் ஜெய்மதுசன்**

இன்று தனது முதலாவது பிறந்த நாளை உடுவிலில் உள்ள இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, ஐயா, மாமாமார், அத்தைமார், சித்திமார், சித்தப்பாமார், அண்ணாமார், அக்காமார், சிறீமாமா குடும்பத்தினர், ரஞ்சன் மாமா குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

நகுலேஸ்வரன்
சுகிர்தராணி தம்பதிகள்.

*உடுவில்.* (89375)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

*(26-06-2001)*

HAPPY BIRTHDAY



**செல்வன் த.தரணிகாந்த்**

மறவன்புலோ மேற்கைச் சேர்ந்த

**தர்மராஜா - சபேசினி** தம்பதிகளின் செல்வப்புதல்வன்

**த.தரணிகாந்த்**

தனது முதலாவது பிறந்த நாளை இன்று(26-06-2001) செவ்வாய்க்கிழமை கொக்குவிலில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

தரணிக்குட்டியை அன்பு அப்பா, அம்மா, வன்னியிலிருக்கும் அப்பம்மா, சித்தப்பா குடும்பம், பெரியப்பா குடும்பம், ரவிமாமா குடும்பம் மற்றும் பெரியப்பாமார், பெரியம்மாமார், அத்தைமார், மாமாமார், அம்மப்பா, அம்மம்மா, சாந்தின்அன்ரா குடும்பம் (கனடா), சாந்தன்மாமா(சுவிஸ்), சத்தியசீலன்மாமா குடும்பம் மற்றும் அப்பப்பாமார், அம்மம்மாமார், அக்காமார், அண்ணன்மார், பாட்டன், பாட்டி, மைத்துனிமார், மைத்துனன்மார், குமார் சித்தப்பா குடும்பம் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் முத்துமாரி அம்மன் அருள்பெற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டுகாலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தற்காலிக முகவரி:-
*கலைவாணி மில்லேன்,*
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.*

தர்மராஜா
*(அப்பா)*

(89312)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
1917
-
07
-
15



விண்ணில்
2001
-
05
-
27

**திருமதி**

**சின்னப்பு மரியம்மா**

**நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்;**
**என் ஓட்டத்தை முடித்து விட்டேன்.**
**விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்.**

(2.திமொ.4:7)

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
உற்றார்,உறவினர்.

*கரணவாய் கிழக்கு,*
*கரவெட்டி.*
(89186)

# படையினர் பாவித்துவரும் வீடுகளுக்கு வாடகை வழங்க நடவடிக்கை எடுக்குக!

## படையணித் தளபதியிடம் கோரிக்கை

கோண்டாவில்,ஜுன்26

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரின் பாவனையில் உள்ள வீடுகளுக்கு இதுவரை எந்தவகையான வாடகைக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை. அதனை வழங்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

நல்லூர், யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த கிராம அலுவலர்கள் ஒன்றிணைந்து 512ஆவது படையணி கட்டளைத் தளபதியிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

512ஆவது படையணிக் கட்டளை அதிகாரி கேணல் சமரசிங்க தலைமையில் ஞானம்ஸ் ஹோட்டலில நடந்த கலந்துரையாடலிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இடம்பெயர்ந்த பிரதேசங்களில் மீளக்குடியமரும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மரங்களை முன் அனுமதியின்றித தறிப்பதைத் தடைசெய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் -

கொழும்பு செல்லும் பயணிகளிடம் பயண அனுமதி விண்ணப்பத்தின் மூன்று பிரதிகள் கோரப்படுகின்றன. அதனைக் குறைக்க வேண்டும் எனவும் -

கிராம அலுவலர்கள் சார்பில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

வீட்டு உரிமையாளர்கள் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்தும் -

வெளிநாட்டில் இருப்பவர்களின் வீடுகளுக்கு உரிமையாளரின் 'பவர் ஒப் அட்ரோர்னி'யைச் சமர்ப்பித்தும் - வீடுகளுக்கு உரிய வாடகையைப் பெறலாம் என்று கட்டளை அதிகாரி தெரிவித்தார்.

சட்டவிரோதமாக மரம் தறிப்பதைத தடைசெய்ய, மரம் ஓரிடத்தில் இருந்து வேறு இடத்துக்கு எடுத்துச் செல்லும்போது அனுமதிப் பத்திரங்களை சோதனை நிலையங்களில் பரிசோதனை செய்ய ஏற்பாடு செய்வதாக அவர் உறுதி அளித்தார்.

கொழும்பு பயண அனுமதி விண்ணப்பம் சம்பந்தமான ஏனைய அலுவலர்களுடனும் கலந்துரையாடியபின்னர் முடிவு அறிவிக்கப்படும் என்றும் படை அதிகாரி குறிப்பிட்டார்.

இகுறிப்பில் நல்லூர் பிரதேச செயலக பதில் பிரதேச செயலாளர் சி.வேல்முருகோன்பிள்ளையும் கலந்துகொண்டார். (க-86)

## சமாந்தரமாக சைக்கிள்களில் சென்ற இருவருக்கு நேர்ந்த கதி

தென்மராட்சி,ஜுன்26

வீதியில் சமாந்தரமாக வந்த சைக்கிள்கள், அவ்வழியே வந்த வாகனத்திற்கு வழி விடுவதற்காக விலக முயன்றபோது ஒன்றுடன் ஒன்று கொழுவுப்பட்டு நடுவீதியில் வீழ்ந்த அவ்வேளை வாகனத்தின் சில்லு சைக்கிள்களீல் ஏறி அவை சேதமடைந்தன.

கடந்த சனிக்கிழமை மாலை கரணவாய் நாவலர் மரத்தடிப் பகுதியில் இவ்விபத்து இடம்பெற்றது.

சைக்கிளிலிருந்து வீழ்ந்ததில காயமடைந்த கரணவாய் செல்வாபுரத்தைச் சேர்ந்த சின்னத்துரை சுகிர்தா (வயது20), கரணவாய் மூத்த விநாயகர் கோயிலடியைச் சேர்ந்த பரஞ்சோதி சுமதி (வயது18) ஆகியோர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

படையினரின் உழவு இயந்திரத்தைக்கண்டு விலக முற்பட்ட வேளையிலேயே விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(க-117)

## நாளை காங்கேசன் செல்கிறார்

காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமில் உள்ள கைதிகளுக்கு வழங்குவதற்கான உணவு மற்றும் கடிதங்களை அவாகளின் உறவினர்கள் நாளை புதன்கிழமை காலை மனித உரிமைகள் ஆணைக குழுவின் யாழ். அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு அதன் அதிகாரி என். ஜீவேஸ்வரா தெரிவித்துள்ளார்.

அன்று கைதிகளைப் பார்வையிடவுள்ள அதிகாரி அவற்றை அவர்களிடம் வழங்குவார். (க-10)

## ப.நோ.கூ. சங்க ஊழியர் சம்பள உயர்வு இம்மாதம் கிடைக்கும்

சங்கானை ப.நோ.கூ. சங்கப் பணியாளர்களுக்கு சம்பள உயர்வு இம்மாதச் சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படவுள்ள்து.

வடக்கு - கிழக்கு மாகாணக் கூட்டுறவு ஊழியர் சேவை ஆணைக்குழு முன்னர் வெளியிட்டிருந்த 31-99 இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் இந்தச் சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளதாகச் சங்கத் தலைவர் ம.சற்குணசிங்கம் தெரிவித்தார்.

சம்பள அதிகரிப்பு வழங்குவதற்கான அங்கீகாரத்தை யாழ். மாவட்ட கூட்டுறவு (அபிவிருத்தி) உதவி ஆணையாளர் செ.கு.சண்முகநாதன் வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-135)

## வவுனியாவில் படையினரின் துண்டுப் பிரசுரங்கள்

வவுனியா,ஜுன்26

வவுனியாவில் தங்கியிருக்கும் பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்களை பயங்கரவாத நடவடிக்கைகளுக்குத் துணைபோக வேண்டாம எனக்கோரி படையினர் அங்கு துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து வருகின்றனர். கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட இந்தத் துண்டுப் பிரசுரம் விநியோகிக்கும் பணிகள் ஞாயிற்றுக்கிழமையும் தொடர்ந்தன என்றும்-

முக்கிய சந்திகள், சோதனை நிலையங்களில் உள்ள படையினர் இவற்றை விநியோகித்து வருகின்றனர் என்றும் - வவுனியாச் செய்திகள் தெரிவித்தன.

பயங்கரவாதச் சம்பவங்களுக்குத துணை போகும் பிறமாவட்டத்தவர்கள் மீது உடனடியாகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் - அந்தத் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-7)

## விண்ணக வாழ்வில் 33ஆம் நாள் நிறைவு

அன்னை மடியில்
17
-
05
-
1939



ஆண்டவன் அடியில்
25
-
05
-
2001

**அந்தோனிப்பிள்ளை எட்வேட் இராஜேந்திரம்**

(துரை)

(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்,
I.C.R.C. உத்தியோகத்தர்)

**"சீவியத்தில் நேசித்த உம்மை மரணத்திலும் மறவோம்"**

**எமக்கெல்லாம் துணையாக இருந்தவரே**
**ஏனையா விட்டகன்றீர் இவ்வுலகை**
**சுமக்கின்றோம் உம்பிரிவால் சோகங்கள்**
**செபிக்கின்றோம் உம்மான்மா சாந்தி பெற!!**

*41/2, ஈச்சமோட்டை வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(89377)

பிரிவால் துயருறும்:
மனைவி, மகள், மகன்மார்,
மருமகள், தாய், சகோதரர்கள்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

உதயம்
08
-
02
-
1980



அஸ்தமனம்
26
-
06
-
1999

**கிருஷ்ணமூர்த்தி - வதனரூபன்**

(ரமேஸ்)

திதி:-04.07.2001

**வெளிச்சம் தரவந்த சூரியனே! - எமை**
**இருளில் அழவைத்து மறைந்ததென்ன?**
**மனம் தொழும் காவிய நாயகனே! - எம்**
**மனங்களில் ஒவியம் ஆனவனே!**
**வருடம் இரண்டு கடந்த பின்னாலும் - உன்**
**வதனரூபம் எம் நினைவில் வாழும்!**
**பூமியின் புதல்வனே உறங்குகிறாயா? உன்**
**பூவிழி திறந்து உறவுகள் பாராயா?**
**கனவிலும் உன்னைத் தேடுகின்றோமே!**
**கண்ணீரில் கவிதைகள் பாடிநின்றோமே!**

உன் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அம்மா, அப்பா,
ஜெகன் அண்ணா,
ரூபன் அண்ணா,
தங்கை யாழினி.

*மூத்தவிநாயகர் கோயிலடி,*
*கரணவாய் தெற்கு,*
*கரவெட்டி.*
(89341)

# பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் என்ற பெயரில் இரு தசாப்தங்களாகத் தொடரும் சித்திரவதைகள்

**சித்திரவதைக்கு எதிரான தினமாக ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனம் செய்யப்பட்ட நாள் இன்றாகும். இதனை முன்னிட்டுச் சித்திரவதை குறித்து "சமூகத்திற்கான ஒரு சட்ட நோக்கு" இங்கு தொகுத்துத் தரப்படுகிறது.**

**ஜூன்** மாதம் 26ஆம் நாள ஐக்கிய நாடுகள் சபையால் சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்காகப் பிரகடனப்படுத்தப்பட்டு அனுஷடிக்கப்பட்டு வருகின்றது. தமிழ்மக்களைப் பொறுத்தளவில் சித்திரவதை என்பது பழகி மரத்துப்போன ஓர் அம்சமாக மாறி விட்டது.

இதற்கு ஒரு காரணம் 1979ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் ஆகும். ஆரம்பத்தில் மூன்று வருடங்களுக்கு மாத்திரம் நடைமுறையில் இருக்கும் எனக் கூறப்பட்ட இச்சட்டம், இன்று இருபது வருடங்களுக்கு மேலாகத் தொடர்கிறது.

இச்சட்டம் அரச பாதுகாப்பு அங்கங்களால் புரியப்படும் சித்திரவதைகளுக்கு ஒருபுறம் பாதுகாப்புக் கவசமாகவும் மறுபுறம் உந்துசக்தியாகவும் அமைகிறது. இந்தச் சட்டம் நடைமுறைக்கு வரமுன்னர் சித்திரவதைகள் இருந்தாலும்கூட சட்டத்தினூடான பாதுகாப்புக் கவசம் அவற்றுக்கு வழங்கப்படவில்லை.

பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் 16ஆம் பிரிவு, பொலீஸாருக்கு அளிக்கப்படும் குற்றஒப்புதல் வாக்குமூலம் அளிப்பவருக்கு எதிராக மேல் நீதிமன்ற வழக்கின் போது சான்றாக முன்வைக்கப்பட அனுமதிக்கின்றது. அத்தோடு தன்னிடமிருந்து இவ் வாக்கு மூலம் சுயவிருப்பின் பேரில் பெறப்படவில்லை என்பதை எண்பிக்கும் பொறுப்பும் இவ் வாக்குமூலத்தை அளிப்பவரின் மேலேயே சுமத்தப்படுகிறது.

ஆனால் சாதாரண சான்றுக் கட்டளைச் சட்டம் பொலீஸாருக்குச் செய்யப்படும் அல்லது அவரது கட்டுக்காவலில் இருந்து செய்யப்படும் எந்தக் குற்றஒப்புதல் வாக்குமூலமும் ஏற்கப்படமாட்டாது என்கிறது குற்றவியல் நடவடிக்கைக் கோவை. நீதிவானுக்கு அளிக்கும் குற்றஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்வதை அனுமதித்தாலும்; தூண்டல், பயமுறுத்தல் வாக்குறுதி என்பவற்றின் மீது அளிக்கப்படக் கூடாது என்கிறது.

மேலும் நீதிவானுக்கு சாதாரண சந்தர்ப்பத்தில் அளித்த குற்றஒப்புதல் வாக்குமூலம் சுயவிருப்பத்தின் அடிப்படையிலேயே அளிக்கப்பட்டது என்பதை எண்பிக்கும் பொறுப்பு வழக்குத் தொடுநரையே சார்கின்றது.

சுருங்கக்கூறின் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தில் குற்றஒப்புதல் வாக்கு மூலம் ஏற்கப்படுவதுடன் அது சுயவிருப்பின் அடிப்படையில் அளிக்கப்படவில்லை என்பதை எண்பிக்கும் பொறுப்பும், அவ்வாக்கு மூலத்தை அளித்தவரிடமே சுமத்தப்படுகிறது.

இது சாதாரண சட்டத்துக்கு முரணானது என்பதுடன், சர்வதேச தராதரத்துக்கு அமைவாக குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்புகளைக் கபளீகரம் செய்கின்றது. மேற்படி பயங்கரவாதச் சட்டமும், அதன் 16ஆவது பிரிவும் சித்திரவதைகளுக்கு அடிப்படையாக அமைகின்றது என்பது மறைக்க முடியாத நிதர்சனமாகும். இச்சட்டம் இருக்கும் வரை இலங்கையில் சித்திரவதையை ஒழிப்போம என்று கூறுவது வெறும் வாய்வீச்சே.

பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் 16ஆவது பிரிவின் பிரகாரம் குற்றஒப்புதல் வாக்குமூலம் பிரதிப் பொலீஸ் அத்தியட்சகர் தரத்திற்குக் குறையாத ஒரு பொலீஸ் அலுவலகருக்கு அளிககப்படின், அதைச் சான்றாக அரச தரப்பு முன்வைக்கும். இவ்வாக்குமூலத்தை அளிப்பவர், தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு அதையும் சுயவிருப்பின் பேரில் அளித்திருக்க வேண்டும். வழமையில் ஒரு குற்றத்தை உண்மையாக ஒருவர் புரிந்திருந்தாலும் கூட அதை அவர் ஒப்புக்கொள்ள இலகுவில் முன்வருவதில்லை. இது சராசரி மனித இயல்பு.

இந்த இயல்புக்கு மீறி எந்த ஒரு குற்றவியல் சட்டமும் குற்றம் செய்தவர் குற்றத்தை ஒப்புக்கொண்டே ஆகவேண்டும் என்று எதிர்பார்ப்பதில்லை. குற்றத்தை எண்பிக்க வேணடிய சான்றுகளை முன்வைக்க வேண்டியது பொலீஸாரின் அல்லது வழக்குத தொடுநரின் கடமை. பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின்கீழ் தொடரப்பட்ட வழக்குகளில் தொண்ணூற்று ஒன்பது வீதமானவை குற்றஒப்புதல் வாக்குமூலத்தை மட்டுமே ஒரேயொரு சான்றாகக் கொண்டுள்ளன.

### வேதனையின் உண்மை

ஆனால் இந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அனைத்தும், சித்திரவதையினால் மாத்திரமே பெறப்படுகின்றது என்பது ஒரு வேதனையான உண்மையாகும். இது இவ்வாறு இருக்க, கைது செய்து தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் எவ்வாறு தம்மை இந்தச் சித்திரவதைகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம் என்பதை இனிப்பார்ப்போம்.

குறிப்பாக ஒருவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டால் உடனடியாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் செஞ்சிலுவைச சர்வதேசக் குழுவுக்கும் அறிவிக்கலாம். இதன்மூலம் காணாமற் போவதைத் தடுப்பதுடன் சித்திரவதையையும் குறைக்கலாம். மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளுக்கு எவ்வித முன்னறிவித்தலும் இன்றி தடுத்து வைக்கப்பட்டவர்களைப் பார்வையிடவும் சித்திரவதைக்கு உட்பட்டவர்கள் இருந்தால் அவர்களைச் சட்ட வைத்திய அதிகாரியிடம் அனுப்பும்படி பொலீஸாரைப் பணிக்கவும் சித்திரவதை குறித்து விசாரணை செய்யவும் பாதிக்கப்பட்டவருக்கு நஷ்டஈடு வழங்கவும் சித்திரவதை குறித்து உரிய நீதிமன்றுக்கு எடுத்துச் செல்லவும் அதிகாரமுண்டு.

ஆனால் இந்தத் தத்துவங்களை உரியவர்கள் உரிய முறையில் பயன்படுத்துகிறார்களா என்பதே இங்கே தொக்கு நிற்கும் கேள்வி.

இதைத் தவிர செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு அறிவிப்பதால காணாமற் போவதைத் தவிர்க்கலாம். சித்திரவதைகளைக் குறைக்கலாம். கடிதத் தொடர்புகளை ஏற்படுத்தலாம். மேற்படி குழு சித்திரவதை



நடந்திருந்தால் மேல் இடத்தின் கவனத்திற்குக் கொண்டு வருமே தவிர நேரடியாக நீதிமன்றங்களில் சாட்சியம் அளிக்க முன்வராது.

இந்த இடத்தில் சரணடைய முற்படுவோர் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் ஊடாகச் சரணடைவதைக்காட்டிலும் நீதிவான் நீதிமன்றத்தில் சட்டத்தரணி மூலம் சரணடைவது அவர்களுக்கு ஒப்பீட்டளவில் நன்மை பயப்பதாக அமையும். இதன்மூலம் சித்திரவதையைத் தடுக்கலாம். சட்டரீதியான பதிவுகள் நீதிமன்றத்தில் சரணடைவது தொடர்பில் பேணப்படும். சட்டத்தரணியின் சட்டரீதியான அறிவுறுத்தல்களையும் பெறக்கூடியதாக இருக்கும்.

### சித்திரவதைகளை கட்டுப்படுத்த உதவும்

அடுத்ததாக நீதிவான் நீதிமன்றில் உள்ள சித்திரவதைக்கு எதிரான பாதுகாப்புக்களை பார்ப்போம். 1178/22ஆம் இலக்க 2001-04-06 திகதியிடப்பட்ட அவசரகால ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நீதிவான் நீதிமன்றில், பொலீஸ் நிலையத்தில் அல்லது ஏதேனும் இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்ப் பட்டியல் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும். மேலும் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்களை நீதிவான் கண்டிப்பாகக் குறைந்த பட்சம் மாதத்திற்கு ஒருமுறையேனும் சென்று பார்வையிட வேண்டும். அத்தோடு தடுத்து வைக்கப்பட்டவர்கள் கண்டிப்பாக பதினான்கு நாள்களுக்கு ஒரு தடவை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட வேண்டும். இந்த ஏற்பாடுகள் சித்திரவதைகளை ஓரளவு கட்டுப்படுத்த உதவும்.

### அனுகூலமாக இருக்கும்

சித்திரவதைக்குள்ளானவர் தானே கையை உயர்த்தி நீதிவானுக்கு தான் எவ்வாறு சித்திரவதை செய்யப்பட்டார், குற்றஒப்புதல் வாக்குமூலத்தை வற்புறுத்தலின் பெயரிலா அளித்தார், அப்படியாயின் என்ன மொழியில் அளிததார், அது வாசித்துக் காட்டப்பட்டதா என்பவற்றைக் கூறலாம். அல்லது இவற்றை சட்டத்தரணி மூலமும் மன்றிற்குக் கூறலாம். இது மேல் நீதிமன்ற, உயா நீதிமன்ற வழக்குகளில் மேற்படி நபருக்கு அனுகூலமாக இருக்கும். கைதினபோது காரணம் கூறப்பட்டதா, பற்றுச்சீட்டு வழங்கப்பட்டதா, பெண் ஒருவரைக் கைது செய்யும்போது உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டதா என்பனவற்றைப் பதிவு செய்தல் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யும்போது அனுகூலமாக இருக்கும்.

நீதிவான் நீதிமன்றில் தடுப்புக் கட்டளையின் கீழ் பொலீஸாரிடம் இருக்கும் ஒருவர் தான் சித்திரவதைக்குட்பட்டதாக முறையிட்டால், அதை உண்மையெனக் காணும் நீதிவான் மீண்டும் அவரைப் பொலீஸாரிடம் கையளிக்கலாமா? இது குறித்து "பட்டலந்த விசாரணை அறிக்கையில்" நீதியரசர் திஸ்ஸ டயஸ் பண்டார நாயக்கா அவ்வாறு கையளிப்பது ஆபத்தானது என எச்சரிக்கிறார்.

அவசரகால ஒழுங்கு விதிகள் என்னதான் கூறினாலும் அரசியல் அமைப்பின் உறுப்புரை 11இனால் வழங்கப்பட்ட சித்திரவதைக்கெதிரான முழுமையான பாதுகாப்பு எந்த நபருக்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் உள்ளது. எனவே மீண்டும் பொலீஸாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற சட்டக் கட்டாயம் இல்லை என்பதுடன் அதிபுத்திசாலித்தனமும் இல்லை.

இங்கு சட்டத்தரணிகளின் பங்கு முக்கியமானது. அரசியல் அமைப்பின் 13 (3) உறுப்புரை, சந்தேகநபர் ஒருவர் சட்டத்தரணியின் உதவியைப் பெற உரித்துடையவர் என்கிறது. பொலீஸா, எந்தவித முன்னறிவித்தலும் இன்றியே திடீரெனச் சந்தேகநபரை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்கின்றனர். இச்சந்தர்ப்பத்தில் சட்டத்தரணியின் உதவியைப் பெற முடியாமற் போய்விடுகின்றது. இங்கு நீதிவான் சட்டத்தரணியின் உதவியைப்பெற வழி செய்து கொடுக்கலாம். அல்லது சந்தேகநபரே சட்டத்தரணியின் உதவி தேவையென நீதிவானுக்கு அறிவிக்கலாம்.

### சட்டத்தரணியின் தவறான அறிவுறுத்தல்

மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆஜராகும் சட்டத்தரணி பொலீஸாருக்கு அஞ்சாமல் தனது கட்சிக்காரர் சித்திரவதைக்கு உள்ளாகி இருந்தால் அதை மன்றுக்குத் தெரிவிக்கவேண்டும். இக்கடமையில் இருந்து தவறிய சட்டத்தரணி ஒருவர் அண்மையில் உயர் நீதிமன்றத் தீர்ப்பில் கடிந்து கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. அண்மையில் யாழ்.சிறைச்சாலையிலுள்ள சித்திரவதைக்குள்ளான ஒரு கைதியைச் சந்தித்தபோது ஏற்பட்ட அனுபவம் சங்கடமானது. ஏனெனில் மேற்படி நபர் தற்போது காயங்கள் ஆறாத நிலையில் உள்ளார். இவரின் சட்டத்தரணி பொலீஸாரிடம் உரையாடி பிணை எடுத்துத் தருவதாகக் கூறி நீதிவானிடம் சித்திரவதை பற்றி எதுவும் கூறவேண்டாம் என்று கேட்டுள்ளார்.

எனவே நீதிவான் கேட்டபோதும் தனக்குள்ள காயங்களைப் பற்றி எதுவும் கூறவில்லை. ஈற்றில் பிணையின்றி தற்போதும் சிறைச்சாலையில் உள்ளார். இதில் இரண்டு விடயங்கள் நோக்கப்பட வேண்டும். ஒன்று பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திலோ, அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழோ நீதிவானுக்குத் தன்னளவில் துணை வழங்கும் தத்துவம் இல்லை. இரண்டு, மேல் நீதிமன்றில் வழக்கு வரும்போது சமர்ப்பிக்கப்படக்கூடியதாக இருந்திருக்கும் சித்திரவதை தொடர்பான மருத்துவச் சான்றை எடுக்கத் தவறியது. மருத்துச்சான்று இருப்பின் உயர் நீதிமன்றத்தில் கூட அடிப்படை உரிமை மீறல் வழக்கு உறுப்புரை 11இன் கீழ் தாக்கல் செய்திருக்கலாம். இவை அனைத்தும் சட்டத்தரணியின் தவறான அறிவுறுத்தலால் இல்லாமற போய்விட்டன.

**சட்டத்தரணி**
**டி.எஸ்.ருசைதாஸ்**

அடுத்ததாக சித்திரவதையைத் தடுப்பது தொடர்பில் சட்டவைத்திய அதிகாரிகளின் துல்லியமான, துணிச்சலான, நேர்மையான அறிக்கைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. சில சமயம் மருத்துவப் பரிசோதனைக்காகப் பாதிக்கப்பட்டவர் உட்படுத்தப்படும்போது பொலீஸார் அருகில் இருக்க விரும்புவார்கள். அவர்கள் இருந்தால் பாதிக்கப்பட்டவர் தன்னுடைய பாதிப்புக்களை வெளிப்படுத்த பயத்தின் காரணமாகத் தயங்குவார்.

எனவே பொலீஸார் இவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும். மறுத்தால் நீதிவானின் கவனத்துக்குக் கொண்டுவரலாம் அல்லது பரிசோதிக்க மறுக்கலாம். ஒரு மருத்

(10 ஆம் பக்கம் பார்க்க)



தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

அந்தப் போட்டிகளில் பல்வேறு பிரிவுகளில் முதன்மை பெற்ற வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு பதக்கங்கள் வழங்கப்பட்டன.

பதக்கங்கள் பெற்ற மாணவர்கள் வெற்றிப் பீடத்தில் நிற்பதையும், அவர்களுடன் தென்மராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் க.குமாரசாமி மற்றும் வடமராட்சி வலய பாட முதன்மை ஆசிரியர் க.சிவகோசரியார் ஆகியோர் உடனிருப்பதையும் படங்களில் காணலாம். (ஒ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட T.Vகள், முகலுப்பனைப் பொருளகள், ரேடியோ BOXகள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 55, சிவன் புது வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் (பி.ப2.00' - 6.00 மணிவரை) (89405)

30 நாள் நிரம்பிய கறுப்பு இன அல்ஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. நாளை (27.06.2001) புதன்கிழமை பார்வையிடலாம். தொடர்பு:- மார்க்கண்டு, M.S.லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (89232)

## தமிழ் இலக்கியம்

O/L மாணவர்களே! தமிழ் இலக்கிய பாட நூல் இல்லையா? அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய இலக்கியக்கட்டுரைகள் நூலைப் படியுங்கள். 7 சிறுகதைகள் "பொருளோ பொருள்" நாடகம், "வீடற்றவன்" நாவல் ஆகியவற்றுக்கு விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. (89412)

## இலகு திருமணசேவை

1974, சதயம், CIMA இறுதி ஆண்டு கொழும்பு வங்கி உத்தியோகத்தருக்கு படித்த அழகான மணப்பெண் தேவை. Doctors, Engineers, Clerks மணமக்கள் உண்டு. உள்நாடு/வெளிநாடு. தொடர்பு: ஞாயிறுகளில் துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (89425)

## புறொயிலர் குஞ்சுகள்

புறொயிலர் குஞ்சுகள் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு விநியோகிக்கப்படும். தொடர்பு: வை. சிவகுமார், 461, நாவலர் வீதி, அத்தியடி அல்லது ரஞ்சிதன், சுபகணநாதன் பண்ணை வீதி, மாலி சந்தி, அல்வாய். (89432)

## தவறிவிட்டது

கூவில், கீரிமலை என்ற முகவரியைச் சேர்ந்த தவசி.தியாகராசா என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.663643517v), விசேட அ.அட்டை (இல.0907006435) என்பன 22.06.2001 இல் யாழ்.ஆஸ்பத்திரிக்கும், யாழ் பஸ் நிலையத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சீமாட்டி புடைவைக்கடை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (89424)

சிவன் கோயிலடி, சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி துரைசிங்கம் சிவகாமிப்பிள்ளை என்பவருடைய வி.அ.அ. (இல.0904021129) 20.06.2001 அன்று கொக்குவில் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சிவயோகநாதன், சிவன் கோயிலடி, சித்தன்கேணி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (89422)

இல.27, ஆசீர்வாதம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கும் மாணிக்கம் தவராசா என்பவரது மோட்டார் சைக்கிள் இன்சூரன்ஸ் ரக்ஸ், லைசன்ஸ், வேதாகமம், தேவாலய ஆவணங்கள், தேவாலய காணிக்கைப் பணமும் அத்துடன் ஏழைக் குடும்பத்தின் ஒரு தொகைப் பணமும் அடங்கிய கைப்பை கொன்வன்ற் சந்திக்கும் பற்றிக்ஸ் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சீயோன் தேவாலயம், இராமையாச் செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (89423)

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியைச் சேர்ந்த சொரூபகாந்தன் ஜெயதேவி என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல. 0902919418) யாழ். நகர் ஆஸ்பத்திரி வீதியில் 25.06.2001 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 89, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, நல்லூர் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (89431)


## ஒப்புநோக்குநர் தேவை

ஓவ்செற் பிறின்ட் அச்சகத்துக்கு ஒப்புநோக்குநர் (PROFF READER) தேவை. தகுதியானோர் உடன் நேரில் வரவும்.

**பிள்ளையார் அச்சகம்**
676, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (89439)


## கொல்களம் அமைக்க எதிர்ப்பு

வடமராட்சி,ஜூன்26

பருத்தித்துறை முனை கோரியடி இடுகாட்டுப் பகுதியல் பருத்தித்துறை நகரசபை கொல்களம் அமைக்க எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் குடியிருப்புக்கள் நெருக்கமாக அமைந்துள்ளதால் கொல்களம் அமைக்க வேண்டாம் என சென்தோமஸ் சனசமூக நிலையம் பருத்தித்துறை நகரசபையைக் கேட்டுள்ளது.

(ஐ-173)

## பயங்கரவாத...

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துவர் பாதிக்கப்பட்டவர்களின் ஆடைகளை அகற்றாமல் பரிசோதித்து இருப்பதாகக் கூறுவதும், பரிசோதிக்காமல் விடுவதும் ஒன்று. காயம் இருக்கின்றதோ இல்லையோ என்பதை ஆடைகளை முழுமையாக அகற்றிப் பார்த்தால் உறுதி செய்து கொள்ள முடியும் என்பதுடன், பாதிக்கப்பட்டவரின் பெயரில் நீதி நிலைநாட்டப்பட உதவியாக இருக்கும்.

நீதிவான் நீதிமன்றத்தில் சட்ட மருத்துவ அறிக்கை சித்திரவதை தொடர்பில் எடுக்கத்தவறினால் கூட மேல் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுப் பத்திரம் வழங்கப்படும்போது கூட பாதிக்கப்பட்டவரை மருத்துவப் பரிசோதனைக்கு அனுமதிக்கும்படி கோரலாம். சித்திரவதை உண்டு என அறிக்கை கிடைக்கப்பெறின் சான்று கட்டளைச் சட்டத்தின் 24ஆம் பிரிவை மீறுவதால் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை சுயமானது என்று கூற முடியாது.

அதாவது இக்குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் சித்திரவதையால் பெறப்பட்டதால் சான்றாக அனுமதிக்க முடியாது போகும். எனவே வழமையாக இச்சந்தர்ப்பத்தில் சட்டமா அதிபர் வழக்கை வாபஸ் வாங்கக் குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுதலை செய்யப்படுவார்.

### சித்திரவதை சர்வதேசக் குற்றம்

உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை வழக்கு உறுப்புரை 11ஐ மீறிவிட்டதாகக் கூறி வழக்குத் தாக்கல் செய்யலாம். உறுப்புரை 11 "எந்த ஒரு நபரும் சித்திரவதைக்கோ அல்லது கொடூர, மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமான நடத்தைக்கோ அல்லது தண்டனைக்கோ உட்படுத்தப்படக் கூடாது" என்கிறது. உறுப்புரை 17 இந்த மீறல்கள் அரச துறையால் புரியப்பட்டால் மாத்திரம்தான் ஏற்புடையதாகும் என்று வரையறுக்கின்றது.

உயர்நீதிமன்றம், சித்திரவதை புரியப்பட்டதாகக் கண்டால் சித்திரவதை நடந்திருக்கிறது எனப் பிரகடனப்படுத்தும். அத்துடன் நட்டஈடும் வழங்கும். சித்திரவதைக்குப் பொறுப்பானவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும்படி சட்டமா அதிபரின் கவனத்திற்கும் கொண்டுவரும், பாதிக்கப்பட்டவரை விடுதலை செய்யும்.

மேலும் சித்திரவதையானது சர்வதேசக் குற்றமாகக் கணிக்கப்படுகிறது. சித்திரவதையாளர் உலகில் எந்த நாட்டில் இருந்தாலும். அந்த நாட்டால் தண்டிக்கப்படலாம்.

முடிவாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்து இரண்டு தசாப்தங்கள் கடந்துவிட்டது. அச்சட்டம் அனுமதித்த சித்திரவதைகளினால் பாதிக்கப்பட்டவர்கள் இனங்காணப்பட்டார்களா? அவர்களுக்குப் புனர்வாழ்வு, உளவியல் சிகிச்சைகள் என்பன அளிக்கப்பட்டனவா? விடுதலைக்குப் பின்பான குடும்ப வாழ்வு சுமுகமாக உள்ளதா? இவற்றை எல்லாம் கண்காணிக்க அமைப்பு ரீதியான எவ்வகையான வேலைத் திட்டங்களைக் கொண்டுள்ளோம் என்று நெஞ்சைத் தொட்டுச் சொல்வோம்.

இன்னமும் இது குறித்துச் சிந்திக்கவில்லையாயின் காலம் தாழ்த்தாது ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுப்போம். ☆

# சந்நிதிப் பாலத்தைத் திருத்தி வீதியை மீண்டும் திறக்குக!

## அமைச்சர் டக்ளஸிடம் கோரிக்கை

தொண்டமனாறு பாலத்தைத் திருத்தி சந்நிதி வீதியைப் போக்குவரத்துக்காகத் திறக்குமாறு கெருடாவில் கிலைஅரசி சனசமூக நிலையம், வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ்விவகார இந்து சமய கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அச்சுவேலி தொடக்கம் தொண்டமனாறு வரையான சந்நிதி வீதியில தம்பாலை வரையுமே போக்குவரத்துக்காக வீதி திறக்கப்பட்டுள்ளது.

தம்பாலையில் இருந்து தொண்டமனாறு வரையிலான எஞ்சிய வீதி மக்கள் போக்குவரத்துக்கு இன்னமும் திறக்கப்படவில்லை. இவ்வீதியில் உள்ள தொண்டமனாறு பாலத்தைத்திருத்தி இவ்வீதியையும் போக்குவரத்துக்காகத் திறந்தால் பொது மக்களுக்குப் பெரிதும் உதவியாக இருப்பதுடன் பல சிரமங்களும் நீங்கும் என அக்கோரிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ-173)

## மாநகரசபை கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்26

யாழ்.மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை முதல்வர் ந.ரவிராஜ் தலைமையில் யாழ்.மாநகர சபையில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் கோரிக்கை குறித்து ஆராயப்படும்.

(ஐ-173)


## A/L 2003 புதிய பிரிவு

(சில கால இடைவெளிக்குப் பின் எமது அனுபவம் மிக்க ஆசிரியர்கள்)

| | | |
|---|---|---|
| பொருளியல் | - | நாதன் |
| தமிழ் | - | குழந்தை |
| இந்துநாகரிகம் | - | அருள்நங்கை/சிறிஸ் |
| நாடகம் | - | குழந்தை சண்முகலிங்கம் |
| அளவையியல் | - | R.P.சர்மா |
| புவியியல் | - | கந்தசாமி |
| அரசியல் | - | கியூபேட் |
| வரலாறு | - | சின்னராசா |

(89437)

ஆரம்பம்: 30.06.2001 (காலை 8 மணி)

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

உதயம்
1977
.
02
.
06



அஸ்தமனம்
2001
.
05
.
27

**செல்வன் பஞ்சரட்ணம் ஜனார்த்தனன்**

அன்புடன் பண்புடன் வாழ்ந்த ஜனார்த்தனா!
உமை எம்மால் மறக்க முடியவில்லையே!

எமது அன்புச் செல்வத்தின் பிரிவுச் செய்தியறிந்து உடன்வந்து எங்களின் துன்பத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (26.06.2001) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*3/3,பத்திரகாளி கோயிலடி,*
*வண் - மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

திரு.திருமதி.நிர்மலா பஞ்சரட்ணம்
குடும்பத்தினர். (89433)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில்
21
-
02
-
1940



விண்ணில்
27
-
05
-
2001

**அமரர் சின்னத்தம்பி முருகேசு**

(ஓய்வு பெற்ற பொலீஸ் குமாரசாமி - மட்டுவில் தெற்கு)

கண்ணை இமை காப்பது போல் காத்து,
எம் நல்வாழ்வுக்கு வழி சமைத்த அன்புத் தெய்வமே!
என்றும் நீர் எம்மனதில் நீங்காதிருப்பீராக!
எமையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு,

மீளாத் துயில் கொண்ட எமது குலவிளக்கின் மரணச் செய்தி கேட்டு உடனே ஓடிவந்து எமக்கு உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள் பலபல.

இன்று(26-06-2001) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தற்காலிக முகவரி:-
*கற்பக்குளை,*
*உடுவில்,*
*சுன்னாகம்.* (89441)

மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதர சகோதரிகள்,
மைத்துனர்கள், பேரப்பிள்ளைகள்.

ஓம்
அன்பே சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

மங்கள விஷ வருஷம் ஆனி 13ஆம் நாள் நாளை(27-06-2001) புதன்கிழமை முற்பகல் 10-17 முதல் 11-18 வரை உள்ள சிங்க இலக்கினமும் ஸப்தமி திதியும் அமிர்த யோகமும் கூடியுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**முகுந்தன்**
அவர்களுக்கும்



எமது கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**பங்கயச்செல்வி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருட் துணைகொண்டு நல்லூர் தர்க்கா தேவி மணி மண்டபத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு:~ மணமகனுடன் கல்விபயின்ற தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, வயாவிளான் மத்திய மகா வித்தியாலயப் பழைய மாணவர்கள் எங்கிருந்தாலும் தயவுசெய்து வருகை தரவும்.**

**தங்கள் நல்வரவை நாடும்:**

திருமதி கி.தங்கராசா
"மங்கள கிரி"
மூளாய், சுழிபுரம். (89429)

~ இருவீட்டார் அழைப்பு ~

திரு.,திருமதி இ.தவபாக்கியநாதன்
டச் றோட்,
மூளாய், சுழிபுரம்.

# நீர்கொழும்பில் குண்டர் கோஷ்டி

# தமிழரின் கடைகள் மீது தாக்குதல்

கொழும்பு, ஜூன் 26

நீர்கொழும்பு அலஸ் வீதியைச் சேர்ந்த பெரும்பான்மை இன இளைஞர் ஒருவர் கடந்த சனிக்கிழமை இரவு கத்திக்குத்துக்கு இலக்கானதை அடுத்து ஞாயிற்றுக்கிழமை நண்பகல் நீர்கொழும்பு கடற்கரை வீதியில் உள்ள தமிழர்களின் பல கடைகள் குண்டர் கும்பல்களினால் அடித்து நொறுக்கப்பட்டதுடன், பலர் தாக்குதல்களுக்கும் இலக்காகியுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-

நீர்கொழும்புப் பகுதியைச் சேர்ந்த தமிழ் யுவதிகளை அலஸ் வீதியைச் சேர்ந்த பெரும்பான்மையின இளைஞர் குழுவொன்று அடிக்கடி பல்வேறு இம்சைகளுக்கு உள்ளாக்கி வந்துள்ளது.

இச்சம்பவங்களினால் தமிழ் இளைஞர்களுக்கும் பெரும்பான்மை இளைஞர் குழுவொன்றிற்கும் இடையே நீண்டகாலமாக முறுகல் நிலை இருந்து வந்தது.

சனிக்கிழமை இரவு நீர்கொழும்பு குடாப்பாடு பகுதியில் நடைபெற்ற இசைக்கச்சேரியைப் பார்க்கச் சென்ற இருதரப்பு இளைஞர்களும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். பின்னர் இந்த வாய்த்தர்க்கம் முற்றிய நிலையிலேயே கத்திக்குத்து இடம்பெற்றதாக அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

கத்திக்குத்துக்கு இலக்காகிய இளைஞன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டு, ஞாயிற்றுக்கிழமை காலை மரணமானதாகச் செய்தி பரவியது.

இதையடுத்து, ஆத்திரமுற்ற அலஸ் வீதியைச் சேர்ந்த சிங்கள இளைஞர்களும், காடையர் கும்பல்களும் என நூற்றுக்கும் மேற்பட்டோர் பொல்லுகள், கத்திகள் மற்றும் வாள்கள் சகிதம் கடற்கரை வீதிக்குள் புகுந்து அங்கிருந்த தமிழர்களது பல கடைகளை அடித்து நொறுக்கி உள்ளனர்.

இவ்வேளையில் அப்பகுதிக்கு வந்த சில தமிழ் இளைஞர்கள் தாக்குதல் நடத்தியவர்களைத் தடுக்க முயலவே அவர்களும் தாக்கப்பட்டதுடன் கடைகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுகள் மீதும் பெற்றோல் குண்டுகளும் வீசப்பட்டன.

அக்கோஷ்டியினர் கடை ஊழியர்களையும், அங்கிருந்தவர்களையும் தாக்கியுள்ளனர். இதனால் தேநீர்க்கடை ஒன்றுமுற்றாக நொறுக்கப்பட்டதுடன் தொலைத்தொடர்பு நிலையம் உட்பட எட்டுக்கும் மேற்பட்ட கடைகள் பலத்த சேதமாக்கப்பட்டுள்ளன.

சுமார் ஒன்றரைமணிநேரம் இந்தச் சம்பவம் நடைபெற்ற போதும், தாக்குதல்கள் எல்லாம் முடிந்த பின்னரே அங்கு பொலீஸார் வந்து சேர்ந்தனர். என்று தெரிவிக்கப்பட்டது (க)

# மேலும் 10 மாணவர்களுக்கு கைகொடுத்தல் நிதி கிடைக்கும்

## யாழ்.பல்கலையில் நாளை கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ். பல்கலைக்கழக முல்லைத்தீவு மாவட்ட மாணவர் ஒன்றியத்தினால் வழங்கப்படும் கைகொடுத்தல் நிதியைப் பெறுவதற்கு மேலும் 10 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்டுள்ள மாணவர், பாடசாலை விவரம் வருமாறு:-

முருகவேள் நிருஜா (ஊரெழு கணேசாவித்தியாலயம்), நவரத்தினம் நவசீலன் (ஊரெழு கணேசாவித்தியாலயம்), இ. சந்திரமோகன் (உரும்பிராய் இந்துக் கல்லூரி), யோகலிங்கம் மறுசுதன் (கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம்).

இராசலிங்கம் நிரூபா (ஊரெழு கணேசா வித்தியாலயம்), தனராஜசிங்கம் திலீபன் (அல்வாய் வடக்கு றோ. க. த. வித்தியாலயம்), கனகலிங்கம் கல்பனா (கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்). சிவஞானம் கஜேந்திரகுமார் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை), குணராசா குபேசன் (உரும்பிராய் றோ. க. த. பாடசாலை), உ. றிபான் (நயினாதீவு ஸ்ரீகணேச வித்தியாலயம்).

இவர்களுக்கான கொடுப்பனவு நாளை புதன்கிழமை யாழ். பல்கலைக்கழக வணிகத்துறையில் வைத்து வழங்கப்படவுள்ளது.

யுத்தத்தால் அவயவங்களை இழந்து பல்வேறு சிரமங்களுடன் கல்வி கற்றுவரும் மாணவர்களுக்கே கைகொடுத்தல் நிதியாக 2 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(க–7)

# இளைஞர் கலாசாரப் போட்டி

அச்சுவேலி, ஜூன் 26

ஜனாதிபதி விருது வழங்கலுக்கான இளைஞர் கலாசார போட்டி தேசிய இளைஞர் மன்றத்தினால் நடத்தப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பம்கோரப்பட்டுள்ளது. விண்ணப்ப இறுதித்தினம் ஜூலை 4 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

பேச்சு, அபிநயநடிப்பு, அறிவிப்பாளர், நாட்டியம் கிராமியப்பாடல், புதுப் பாடல், குறு நாடகம், நடனம், நாட்டுக்கூத்து, சாத்திரிய வாத்தியம், மேலைத்தேச வாத்தியம், நாடகம்' வில்லுப்பாட்டு, நகைச்சுவை' நாடகம் என்பனவற்றில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

தேசிய மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் பரிசுகள் வழங்கப்படுவதுடன் தேசிய மட்டத்தில் ஜனாதிபதி விருதும் வழங்கப்படவுள்ளன.

(க-11)

# கீரிமலையில் பாலஸ்தாபனம்

கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் நாளை புதன்கிழமை ஆனி உத்தர நன்னாளில் பாலஸ்தாபனம் நடைபெறவுள்ளது.

கடந்த 12 வருடகாலம் பூசை வழிபாடுகள் எதுவுமின்றி இருந்து வரும்இவ்வாலயம் தற்போது புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வருடத்தில் கும்பாபிஷேகத்தை நடத்தத் திட்டமிட்டிருப்பதாக ஆலய ஆதீன கர்த்தா சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள் தெரிவித்துள்ளார், (க–135)

## சமாதானத் தீர்வை வலியுறுத்துவதற்காக

# 600 அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் கொழும்பில் கூடுவர்!

கொழும்பு, ஜூன் 26

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தக் கூடிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்களைத் தாமதமின்றி ஆரம்பிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி அறுநூறு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடுத்த வார இறுதிக்குள், கொழும்பில் கூடவுள்ளார்கள்,

கொழும்பு — 7 இல் உள்ள மகாவலி நிலையத்தில், கூடவிருக்கும் இவர்கள் அரசாங்கமும், புலிகள் இயக்கத்தினரும் சமாதானப் பேச்சுக்களைத் தாமதமின்றி ஆரம்பிக்க வேண்டும் என வலியுறுத்துவார்கள்.

தேசிய ஐக்கியத்திற்கான அரச சார்பற்ற நிறுவனங்களின் மன்ற முக்கியஸ்தர் மாதம்பாகம அஸ்ஸாஜி நாயக்கதேரோ ஞாயிற்றுக்கிழமை மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார்.

தேசிய ஐக்கியத்திற்கான அரச சார்பற்ற நிறுவனங்களின் மன்றம் ஒழுங்கு செய்து வரும் இவ்விசேட கூட்டத்தின் போது, புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்கும் படியும், நோர்வே நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்படும் என்றும் அவர் கூறினார். (க)

## புதுயுகத்திற்கான வழிகாட்டல்

# கண்காட்சிப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர் விவரம்

யாழ்ப்பாணம் ஜூன் 26

யாழ். கல்வி வலயத்தின் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற 'புதுயுகத்துக்கான வழிகாட்டல்' மாணவர் ஆக்கத்திறன் கண்காட்சிப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

மூன்று பிரிவுகளாக நடைபெற்ற மேற்படி போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவ, மாணவிகளின் பெயர் விவரங்கள் வருமாறு:-

**பிரிவு - தரம் 1 - 5**

முதலாமிடம் — ஜெ. நந்தகோபன் (ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.) இரண்டாமிடம் — வ. நிரோஷான் (யாழ். பரியோவான் கல்லூரி) மூன்றாமிடம்—இ. சரண்யா (யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை)

**தரம் 6 - 9**

முதலாமிடம் — ஜெ. சுஜீவன் (யாழ். இந்துக் கல்லூரி) இரண்டாமிடம்—றோ. லோஜின் தனுஜா (யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்) மூன்றாமிடம் — சு. அகிலன் (கொக்குவில் இந்துக் கல்லூரி)

**தரம் 10 - 13**

முதலாமிடம் — வி. சத்தியப்பிரசன்னா (ஸ்ரான்லிக் கல்லூரி) இரண்டாமிடம் — வி. கணேசன் (புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரி) மூன்றாமிடம் —ஜெ. ஜெயப்பிரபா (யாழ். இந்து மகளிர் கல்லூரி)

மூன்று பிரிவுகளிலும் இருந்து ஒவ்வொரு ஆசிரியர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் பெயர் விவரங்கள்வருமாறு:-

**தரம் 1 - 5**

திருமதி எஸ். நாகேஸ்வரி (கோண்டாவில் இந்து ம.வி.)

**தரம் 6 - 9**

எஸ். கலாஜினி (யாழ். மத்திய கல்லூரி)

**தரம் 10 - 13**

திருமதி செ. ரட்ணசிங்கம் (நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலை)

இவர்களுக்கான சான்றிதழ்கள் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும் என்று யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

(க-10)

# கொழும்புத்துறை மக்கள் மீளகுடியமர முன்னேற்பாடு

அரியாலை, ஜூன் 26

கொழும்புத்துறை ஆனந்தன் வடலிப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்வதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பகுதியில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் வெளியேறிச் சென்றதை அடுத்து மக்கள் அப்பகுதிக்குச் சென்று தமது வீடுகளைத் துப்பரவு செய்யும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

வீட்டு வளவுகளில் வெடிக்காத நிலையில் பரவலாகச் ஷெல்கள் காணப்படுகின்றன என்று அங்கு சென்று திரும்பியவர்கள் தெரிவிக்கின்றனர்.

(க–17)

# குருநகர் களஞ்சியத் திருட்டு வழக்கு சாவகச்சேரி நீதிமன்றுக்கு மாற்றம்

## மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு

யாழ்பபாணம், ஜூன் 26

குருநகர் அரச களஞ்சியத் திருட்டு வழக்கை சாவகச்சேரி நீதிமன்றுக்கு மாற்றுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் யாழ். நீதிமன்றுக்கு உத்தரவிட்டுள்ளது.

குருநகர் அரச களஞ்சிய வழக்கு விசாரணைகள் யாழ். நீதிமன்றத்தினால் நடத்தப்பட்டபோது, இந்த வழக்கில் சாட்சியான மேற்படி களஞ்சியத்தின் பொறுப்பாளர் எஸ். கதிர்காமநாதன் நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இவரைப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரி யாழ். நீதிமன்றில் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இவரது மனைவி திருமதி எஸ். கதிர்காமநாதன் வவுனியா மேன் நீதிமன்றில் தனது கணவரைப் பிணையில் விடுமாறு கோரி மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரணை செய்த மேன் நீதிமன்றம் இவரைப் பிணையில்விடுவிக்குமாறு உத்தரவு பிறப்பித்ததைத் தொடர்ந்து, அவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

யாழ். நீதிமன்றத்தில் நடைபெறும் இந்த வழக்கு விசாரணைகளில், தமக்கு நம்பிக்கை இல்லை என்றும், இவ்வழக்கை வேறு ஒரு நீதிமன்றுக்கு மாற்றுமாறும் களஞ்சியப் பொறுப்பாளரின் மனைவி கொழும்பிலுள்ள மேன் முறையீட்டு நீதிமன்றில் பின்னர் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

இந்த வழக்குத் தொடர்பான முழு ஆவணங்களையும் பரிசீலனை செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம் சாவகச்சேரி நீதிமன்றில் இந்த வழக்கைப் பாரப்படுத்துமாறு யாழ். நீதிமன்றுக்கு உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை களஞ்சியப் பொறுப்பாளர் தினமும் காலை 9 மணிக்கு யாழ். பொலீஸ் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என்றும் யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இவ்வுத்தரவைரத்துச் செய்யுமாறு கோரியும் களஞ்சியப் பொறுப்பாளரின் மனைவி வவுனியா மேன்நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இம்மனுவை விசாரித்த மேன் நீதிமன்ற நீதிபதி எஸ். எஸ். வரதராஜா களஞ்சியக் காப்பாளர் ஓர் அரச ஊழியராக இருப்பதனால் தினமும் யாழ். பொலீஸ் நிலையத்துக்குச் சென்று கையெழுத்து வைக்கத் தேவையில்லை என்று பணித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-5)

# திருமலை செல்லும் ஆசிரியர்களுக்கு 'றான்' அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

திருகோணமலையில் தற்பொழுது நடைபெற்று வரும் மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியின் மெய்வன்மைப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள மாணவர் அணி நாளை மறுதினம் வியாழக்கிழமை கப்பலில் திருமலை செல்லவுள்ளது.

மாணவர்களுக்குப் பொறுப்பாகத் திருமலை செல்லும் பொறுப்பாசிரியர்களை நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு 'றான்' அலுவலகத்துக்கு வந்து பயணச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுக்குழு அறிவித்துள்ளது.

நேற்றையதினம் பெருவிளையாட்டுகள் (குழுப்போட்டிகள்) ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகி 3 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளன.

(க–10)

# மோ. சைக்கிள் இலக்கத்தகடுகள் கப்பலில்


யாழ்ப்பாணம், ஜூன் 26

மாசாண அடையாளமிடப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கான இலக்கத்தகடுகள் யாழ். செயலக மோட்டார் போக்குவரத்துப் பிரிவினால் கப்பல் மூலம் கொழும்பிலிருந்து எடுத்து வரப்படவுள்ளன.

இந்த இலக்கத் தகடுகள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும் மோட்டார் சைக்கிள் உரிமையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இதேவேளை சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கான 3 ஆயிரம் படிவங்களும் கப்பல் மூலம் எடுத்து வரப்படவுள்ளன என்று யாழ். செயலக மோட்டார் போக்குவரத்துப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.

(க-5)



இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினால் 'சமுதாயத்தில் ஆண் பெண்களுக்கான சம வாய்ப்பு' என்னும் தலைப்பில் வேம்படி மகளிர் கல்லூரியில் கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது.

இக்கருத்தரங்கில் மக்கள் வங்கி (கன்னாதிட்டி) முகாமையாளர் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம், யாழ்.இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராஜா ஆகியோர் உரையாற்றுவதையும் -

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம், சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் உட்பட நிகழ்வில் கலந்து கொண்ட ஆசிரியைகளின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (ஐ-5)

*(படங்கள்: றோய் மதிவதனன்)*

# மாணவர் சந்ததி சீரழிவது பெரும் ஆபத்தை உண்டாக்கும்!

## ஒன்றுகூடல் நிகழ்வில் பொருளியல் துறைத் தலைவர் உரை

வடமராட்சி,ஜூன்26

இன்று மாணவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாடுகள் சீரழிந்து வருகின்றன. இது எதிர்காலச் சந்ததிக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது. இந்நிலை நீடிக்குமானால் எதிர்காலத்தில் பாரதூரமான பயங்கர விளைவுகளை நாம் எதிர்நோக்க வேண்டிய அவலநிலை ஏற்படும்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் வி.பி. சிவநாதன் கூறினார்.

கட்டைவேலி ஞானாசாரியார் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்களின் ஒன்றுகூடல் வைபவத்தில் அவர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். அங்கு அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

இன்றைய மாணவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாடுகள் மற்றவர் கள் குறைகூறுமளவிற்கு சீர்குலைந்துள்ளமை மிகக் கவலைக்குரியதாகும்.

கடந்த காலங்களில் மாணவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாடுகள் என்பன பாடசாலை தொடக்கம் வீடு உள்ளிட்ட பல்கலைக்கழகம் வரை மற்றவர்களால் போற்றப்படும் படியாக இருந்து வந்துள்ளன. பெரியோர்கள், கல்விமான்களால் அன்றைய மாணவர்கள் மிகப் போற்றப்பட்டு வந்துள்ளனர்.

இன்று பத்திரிகைகளை விரித்துப் பார்த்தால் இன்றைய மாணவர் குறித்து வெளிவரும் செய்திகள் அதிர்ச்சியும், கவலைகளும் தருபவையாகவே காணப்படுகின்றன. இந்நிலை ஏன் ஏற்பட்டது? இத்துன்பகரமான நிலைக்கு நாங்கள் அனைவரும் பொறுப்பானவர்கள் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

சினிமாப் படங்களைப் பார்த்து ரசிப்பதிலேயே மாணவர்கள் நாட்டம் கொள்வதை இன்றைய கால கட்டத்தில் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. சினிமா வேறு, வாழ்க்கை வேறு என்பதை மாணவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். பெற்றோர்கள் பாடசாலை மீது குறைகூறி வருகின்றனர். பாடசாலைகளோ பெற்றோரைக் குறைகூறுகின்றன. சமூகமோ பல்கலைக்கழகங்களைக் குறைகூற முற்படுகிறது. இவ்வாறு மாறி மாறி குறை கூறிக்கொண்டிருப்பதில் எவ்வித அர்த்தமுமில்லை. எங்கள் தவறுகளை நாமே உணர்ந்து திருந்தி ஒழுக்கமுள்ள சமுதாயத்தை தோற்றுவிக்கப் பாடுபடவேண்டும் - என்று அவர் தெரிவித்தார்.

(ஐ-173)

## ஆண்டு விழா

வடமராட்சி,ஜூன்26

மெதடிஸ்த திருச்சபையின் கண்காணிப்பில் இயங்கும் கட்டைவேலி சிறுவர் பராமரிப்பு இல்லத்தின் 12 ஆம் ஆண்டு நிறைவு விழா பருத்தித்துறை கட்டைவேலி சேகர முகாமைக்குரு அருட்செல்வி ஜெயக்குமாரி இரட்ணசிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

விழாவில் கே.வி.கே.யோகரட்ணம இல்லத்தின் வரலாறு பற்றி எடுத்துக் கூறினார். தென்னிந்தியத் திருச்சபைப் போதகர் எச்.வசந்தகுமார் அருளுரையாற்றினார். இல்லச் சிறார்களின் பாடல்களும் இடம்பெற்றன.

(ஐ-173)

## ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி,ஜூன்26

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' ஆத்மீக சஞ்சிகையின் ஜூன் மாத இதழ் வெளியீட்டுவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் பேரவையின் தலைவர் இ.நாகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இச் சஞ்சிகையின் வெளியீட்டுரையை சிறுப்பிட்டி கிராம உத்தியோகத்தர் க.ஸ்ரீஸ்கந்தராசாவும், மதிப்புரையை புத்தொளி ந.சிவபாதமும் நிகழ்த்துவார்கள்.

(ஐ-173)

## அதிபர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜூன்26

யாழ். கல்வி வலயத்தின் ஆரம்பப் பாடசாலை அதிபர்கள் மற்றும் கோட்டக்கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கான 'வாண்மை விருத்திப் பயிற்சி' செயலமர்வு எதிர்வரும் வியாழன், வெள்ளி இரு தினங்களும் காலை 9மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் 'ரி.ஐ.பி' திட்டப்பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இச்செயலமர்வில் உரியவர்களைக் கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

(க-10)

# 4 இடங்களில் இயங்கும் தென்மராட்சி பிரதேச செயலகம்

யாழ்ப்பாணம்,ஜூன்26

தென்மராட்சி பிரதேச செயலகம் இடம்பெயர்ந்த மக்களின் நன்மை கருதி நான்கு இடங்களில் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இணுவில் செயலகத்தின் தலைமை அலுவலகமும் நெல்லியடியில் உப அலுவலகமும் இயங்கி வருவதுடன் கைதடியில் செவ்வாய்க் கிழமைகளிலும், கொடிகாமத்தில் வியாழக்கிழமைகளிலும் நடமாடும் செயலகமாகவும் இது இயங்கி வருகிறது.

இதேவேளை மீசாலையில் கிராம அலுவலர் அலுவலகம் ஒன்று அண்மையில் திறக்கப்பட்டு பிரதேச செயலகத்தின் இணைப்புச் செயலகமாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

(க-5)

## ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை:

# இம்முறையும் செய்முறைத் தேர்வு பாடசாலை மட்டத்தில் நடக்கும்

வலிகாமம் தெற்கு,ஜூன்26

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெற இருக்கும் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையின் அழகியல் பாடங்களினதும் தொழில்நுட்பப் பாடங்களினதும் செய்முறைப் பரீட்சைகள் இம் முறையும் பாடசாலை மட்டத்தில் நடத்தப்படும் என பிரதிப் பரீட்சை ஆணையாளர் எல்.எம்.டி. தர்மசேன அறிவித்துள்ளார்.

செய்முறைப் பரீட்சைகளின் போது பரீட்சகர் குழுக்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை பற்றி விசேட கவனம் செலுத்தவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

செய்முறைப் பரீட்சைகளின் போது கடந்த வருடங்களில் பரீட்சகர் குழுக்களில் வெளிப் பரீட்சகர் நியமிக்கப்படவில்லை என்ற குறை எமது கவனத்துக்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வெளிப் பரீட்சகர் நியமித்து செய்முறைப் பரீட்சையை நடத்தாது விட்டால் புள்ளிகளின் நம்பகத்தன்மை பற்றி பிரச்சினைகள் எழுவதற்கு வாய்ப்பு உண்டு.

இவ்வருடம் நடைபெறவுள்ள பாடசாலை செய்முறை- பரீட்சைகளின் போது வெளிப்பரீட்சகர் நியமிக்கப்படாவிட்டால், அதிபர்களால் அனுப்பப்படும் உரிய புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அத்துடன் செய்முறைப் பரீட்சையை நடத்தியமைக்கான கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டா.

சென்றமுறை பரீட்சையின் போது சில பாடசாலைகளில் இருந்து புள்ளிகள் அனுப்பப்படாமையால் பெறுபேறுகள் வெளியிடும் போது எழுத்துப் பரீட்சையின் பெறுபேறு மாத்திரமே வெளியிடப்பட்டது. இதனால் அதிபர்கள் பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. எனவே உரிய காலத்தில் செய்முறைப் பரீட்சைப் புள்ளியை அனுப்புவதற்கு அதிபர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - இப்படி பிரதிப் பரீட்சை ஆணையாளர் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

(க-152)

## நல்லூரில் இரு கடைகளில் திருட்டு

நல்லூர் - கைலாசபிள்ளையார் கோயில் வீதியில் உள்ள இரு கடைகளில் நேற்று முன்தினம் பின்னிரவில் புகுந்த திருடர் கோஷ்டி ஒன்று அங்கிருந்த பெறுமதி வாய்ந்த பொருள்களைத் திருடிச் சென்றுள்ளதாக யாழ் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கைலாச பிள்ளையார் கோயில் வீதியில் உள்ள தேநீர்க்கடை ஒன்றிலும் அருகிலிருந்த பலசரக்குக் கடை ஒன்றிலும் ஊரடங்கு வேளையில் கடைக் கதவுகளை உடைத்து நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 5000 ரூபா பணத்தையும் பெருந்தொகையான பொருள்களையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

சிகரெட்டுகள், பென்டோர்ச் பற்றிகள், சோடாக்கள் மற்றும் பிஸ்கெட் பெட்டிகள் போன்றவையே திருட்டுப் போயுள்ளன. இவற்றின் பெறுமதி சுமார் ஒன்றரை லட்சம் ரூபாவாகும் என்று கடை உரிமையாளர்கள் இருவரும் தெரிவித்தனர். (க-9)


# அந்தியேட்டிக் கிரியைகள்

தோற்றம் 22 - 03 - 1929



மறைவு 29 - 05 - 2001

## அமரர் சிற்றம்பலம் தங்கத்துரை

துன்னாலை கிழக்கு பொன்னந்தோட்டத்தை வதிவிடமாகக்கொண்ட சிற்றம்பலம் தங்கத்துரை அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (27.06.2001) புதன்கிழமை கொழும்பில் நடைபெறுகின்றன என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

**ச.மா.கந்தசாமி** Ret.V.H (மைத்துனர்)
(வல்லிபுர தேவஸ்தான மகாசபை - தலைவர்)
**க.விபுலானந்தன்** (மருமகன்)
(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

மத்னபுரி,
*துன்னாலை வடக்கு,*
*கரவெட்டி.* (89446)

# மரண அறிவித்தல்

## நவரத்தினம் கதிர்காமநாதன் (கிச்சான்)

முல்லாத்தனை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் கதிர்காமநாதன் (கிச்சான்) 24.06.2001 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் - இராசலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், வரதலட்சுமியின் அன்புக் கணவரும், தர்ஷனின் அன்புத் தந்தையும், கணேசலிங்கம், விஜயகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பத்மதேவி, ஜெயவாணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், நவரூபன் (கனடா), காவேரி, பிரக தீஸ், உமை யாள் (பிரான்ஸ்) ஆகியோரின் சிறியதகப்பனாரும், கனகசபாபதி கமலாசினி தம்பதிகளின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (28.06.2001) வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*கல்லூரி ஒழுங்கை,*
*லட்சுமிபுரி,*
*கொக்குவில்.*

தகவல்:
**ந.இராசலட்சுமி**
(தாயார்)

(89444)

# கூவில் தீபஜோதி சனசமூகநிலையத்தின் 27ஆவது ஆண்டு நிறைவு

## விளையாட்டுப்போட்டி 20-07-2001

எமது நிலையத்தின் 27ஆம் ஆண்டு நிறைவையிட்டு நடைபெறவுள்ள வெளிக் கழகங்களுக்கான போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் எதிர்வரும் (02-07-2001) திங்கட் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நிலையத்தில் நேரடியாக விளையாட்டு விதிகளுக்கமைவாகப் பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளவும்.

✦ கயிறிழுத்தல் ஆண்கள ✦ கரப்பந்தாட்டம் ஆண்கள்
(5 நபர்கொண்ட ஓவர் கேம்)
✦ வலைப்பந்தாட்டம் பெண்கள்

செயலாளர்
கூவில் தீபஜோதி ச.ச.நிலையம்,
*கூவில்-புலோலி.*

(89445)

# வேலணை பிரதேச சபை அறிவித்தல்

*'ஒழுக்கம் விழுப்பம் தரலால் - ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"*

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் உயர் திருவிழாவானது 21.06.2001 முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 06.07.2001 ஆம் திகதி வரை உற்சவம் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது. இக்காலப் பகுதியில் ஆலய வீதியிலும், வெளிச் சுற்றாடல்களிலும் தற்காலிக வியாபார நிலையங்களை அமைத்து, வியாபாரம் செய்வோர் வேலணை பிரதேச சபையின் நயினாதீவு உப பணிமனையுடன் தொடர்பு கொண்டு அனுமதிப் பத்திரம் பெற்று, பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியுடன் வியாபாரத்தில் ஈடுபடவேண்டும்.

02) நயினாதீவு - குறிகாட்டுவான் படகுச் சேவையில் ஈடுபடுகின்ற படகு உரிமையாளர்களும், இக்காலப் பகுதியில் விசேட படகுச் சேவை நடத்த வருகின்ற படகு உரிமையாளர்களும் நயினாதீவு உப அலுவலகத்தில் படகு ஒன்றிற்கான, தலா ஆயிரம் ரூபாவினை (1000/-) அனுமதிக் கட்டணமாகச் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

03) உயர் திருவிழா காலப்பகுதியில் காலை 10.00 மணி முதல் 2.00 மணி வரையும் பிரதான வீதியிலும் யாத்திரிகர் மடத்திற்கு அப்பாலும், கோயிலின் தெற்கு மதிலுக்கு அருகிலுள்ள வீதியில், மேற்கு மதில் எல்லைக்குள்ளும் துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

04) குறிகாட்டுவான் துறைப்பகுதியில் புங்குடுதீவு உப அலுவலகத்தினால் வாகனத்தரிப்பிட வசதிகள், சுகாதார, குடிநீர் வசதிகள் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன. சகல வாகன உரிமையாளர்களும் புங்குடுதீவு உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களால் பணிக்கப்படும் ஒழுங்குமுறைகளைப் பேணுவதுடன், அதற்கான கட்டணத்தையும் வழங்கி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

05) விழாக்காலத்தில் ஆலயத்திற்கு வருகை தரும் அடியவர்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக நடந்துகொள்வதுடன் எமது கலை கலாசாரப் பண்பாடுகளிற்கு ஊறு விளைவிக்கும் எந்தச் செயல்களிலும் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

*"எம்கடன் பணி செய்து கிடப்பதே"*

திரு.ந.கருணாகரகுருமூர்த்தி
(ஜே.பி.யு.எம்.)
*தலைவர், வேலணை பிரதேச சபை.*

(C/17226)

---

உ
**சங்கானை**

## அருள்மிகு கூடத்து மனோன்மணி அம்பாள் திருக்கோயில்

## வருடாந்த அலங்கார உற்சவம்

**இன்று (26.06.2001) செவ்வாய் - ஆரம்பம்**
**05.07.2001 வியாழன் - பூர்த்தி**

பத்துத் தினங்களும் காலை 9 மணிக்கு
அபிஷேகமும் தொடர்ந்து பூசையும்
மாலை 4.30 மணி பூசை
5.00 " சொற்பொழிவு
6.00 " வசந்த மண்டபப் பூசை
05.07.2001 வியாழன் பிற்பகல் 5 மணிக்கு தெருவீதி விழா

*ஆலய குரு:*
பிரம்மஸ்ரீ செ.சுகுமாரசர்மா
*உற்சவகாலக் குரு:*
பிரம்மஸ்ரீ தானு. வாசுதேவக் குருக்கள்

(89456) - பரிபாலன சபை.

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
10
-
04
-
1924



விண்ணில்
07
-
07
-
2000

## அமரர் த.நடராசா

(ஓய்வுபெற்ற பிரதி அதிபர், இணுவில் மத்தியகல்லூரி)

அப்பா!
பெயர் சொல்லப் பிள்ளையுண்டு - பெரும்
பெயரான சொந்தமுண்டு
தேவையையார் அறிவார் - என்
தேவையையார் அறிவார் - உங்களைப் போல்
தெய்வமொன்றே அறியும்....

கால சுமை தாங்கி போலே - மார்பில்
எமைத் தாங்கி எங்களை
சந்தோசமாக வாழ வழிகாட்டினீர்களேயப்பா!
உங்கள் பிரிவை எப்படியப்பா எங்களால்
ஆற்றமுடியும்?
ஓராண்டு ஓடி மறைந்தாலும் நாங்கள் இருக்கும்
வரை நீங்களும் எங்களுடன் இருப்பீர்களப்பா!

*இணுவில் தெற்கு,*
*இணுவில்.*
(C/17225)
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

## மடு தேவாலய உற்சவம்

மடுத்தேவாலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 2ஆம்திகதி நடைபெறவுள்ளது. இந்த உற்சவத்தின் திருப்பலிப் பூசைகளை மட்டக்களப்பு திருமலை மாவட்ட ஆயர் அதிவண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை நடத்தவிருக்கின்றார்.

மன்னார் ஆயர் அதிவண. ராயப்பு ஜோசப் வெளிநாடு சென்றிருப்பதாலேயே இவர் இவ்வருட உற்சவத்தை நடத்துகின்றார். (உ-3)

## ஒருங்கிணைப்புக் கூட்டம்

கோப்பாய் பிரதேச செலகப் பிரிவின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணி முதல் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான அழைப்புக் கடிதங்கள் திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-72)

## பள்ளி....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடங்களைப் படிக்கக் கற்றுக் கொள்வது அவசியமாகும்.

சிறுவயதில் நிகழும் சம்பவங்கள் ஒருவரின் ஆளுமையை விருத்தியடையச் செய்கின்றன. சிறுவயதில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்களை நினைவூட்டும் போது பயந்த சுபாவம் வெளிப்படுகின்றது. இவ்வாறான சுபாவம் உடையவரை அவருடன் கதைத்து ஆராய்வதன் மூலம் பயத்தினின்றும் வெளிக்கொணரலாம். கவலைப்படுபவரை அழவிடுவதனால் அவரின் கவலையைக் குறைக்கலாம். இதேபோன்று கோப உணர்வுடையவரை வலைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், கிரிக்கெற் விளையாட்டு உணர்வுகளைக் கொடுப்பதன் மூலம் கோபத்தைத் தணியச் செய்யலாம். குற்றஉணர்வு, பிரயோசனமற்ற முறையில் சிந்திப்பவர்களை அறிவு சார்ந்த ரீதியில் மாற்றலாம். யுத்தத்தினால் கை,கால்களை இழந்திருப்பின் அல்லது உறவுகள், உடைமைகளை இழந்திருப்பின் இவைகளும் அதிக நெருக்கீட்டை ஏற்படுத்தும். இதனைவிட குடும்பச் சண்டைகள், பிணக்குகள், அயலவர்களுடனான பிணக்குகள், அகதி முகாம் வாழ்க்கை என்பனவும் தகுந்த முறையில் ஆராயப்படவேண்டியவை. ★

## திருத்தம்

நேற்றைய உதயனின் (25.06.2001) கடைசிப் பக்கத்தில் 'திருமண நன்றி நவிலல்' என்னும் தலைப்பில் வெளியான விளம்பரத்தில் -

நன்றி தெரிவித்து விளம்பரத்தைப் பிரசுரித்த புதுமணத் தம்பதிகளின் பெயர் **பாஸ்கரன் - சகிலா** என்று இருக்கவேண்டும்.

அது தவறுதலாக **பாஸ்கரன் - சசிகலா** என்று பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம்.


ராஜா யாழ்ப்பாணம்
9வேடங்களில் நடித்த
அஜித்,
வசுந்துராதாஸ், நக்மா, மீனா
மற்றும் பலர் நடிப்பில்
CITIZEN சிட்டிசன்
தினசரி 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00(பு.நே)
(C/17000)

லஷ்சுமி இணுவில்.
விஜயகாந்த்,லைலா, நாசர்
நடிப்பில்
கள்ளழகர்
(ரீல்ஸ்)
S.T.R.பிலிம்ஸ் புதிய வெளியீடு.
இனிய பாடல்கள், சண்டை காட்சிகள்
நிறைந்த படம்.
தினசரி காட்சிகள் : 10.30, 2.30 (ப.நே.)
(89460)

நாகம்ஸ்
சுன்னாகம்
விஜயகாந்த், மீனா
நடித்த
சேதுபதி IPS
(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30(புதிய நேரம்)
சனி, ஞாயிறு விசேட காட்சி 6.30 மணிக்கு
(89450)


---

# படம் பார்த்த ஆறு பேர் தாக்கப்பட்டனர்

தென்மராட்சி,ஜூன்26

கரணவாய் மேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று படம் பார்த்துக்கொண்டிருந்த அறுவரைப் படையினர் கைது செய்து தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த சின்னத்தம்பி கந்தசாமி (வயது 52), சின்னத்தம்பி செல்வவிநாயகம்(வயது43), கந்தசாமி ஜெயானந்தன்(வயது23), செல்வராசா கமலரூபன்(வயது19) ஆகியோரே காயமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-3-117)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
22
-
05
-
1928



மறைவு
27
-
05
-
2001

## அருளம்பலம் பூமணி

நீயிருந்த நாள்களெல்லாம்
நினைந்துருகி நோக்கையிலே
பண்பாக வழி நடத்தி - உன்
பாசநிலை காட்டி வந்தாய்
திங்களொன்றில் நீயில்லை
திக்குற்று நிற்கின்றோம் - உம் நினைவுகளால்

*145, கொழும்புத்துறை வீதி,*
*சந்தனமாதா கோயிலருகில்,*
*சுண்டிக்குளி.*
(89458)
பிரிவால் துயருறும்:
*கணவன், மக்கள்,*
*மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்.*

---

# கண்ணீர் அஞ்சலி

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் (காங்கேசன்துறை)
பாதுகாப்பு உத்தியோகத்தர்களாகக் கடமைபுரியும்
**திரு. ஹரிச்சந்திரன்** அவர்களின் தாயாரும்
திரு. தேவராசா அவர்களின் மாமியாருமாகிய

## மயில்வாகனம் நல்லம்மா

அவர்களின் பிரிவினால் துயருறும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
***பாதுகாப்பு அதிகாரியும்,***
***பாதுகாப்பு உத்தியோகத்தர்களும்,***
***இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்.***

(C/17227)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி தே.பரிமேலழகபிள்ளை** அவர்களின்
அருமைத் தாயாரும்
கோப்பாய் கல்விக்கோட்ட ஆங்கில ஆசிரியஆலோசகர்
**திரு.வே.பரிமேலழகப்பிள்ளை** அவர்களின்
அன்பு மாமியாருமான

## திருமதி தங்கம்மா அருணாசலம்

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்.

(89457)

---

# மரண அறிவித்தல்

## அருணாசலம் தங்கம்மா

சிறுப்பிட்டி தெற்கைச் சேர்ந்த அருணாசலம் தங்கம்மா அவர்கள் நேற்று (25.06.2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா அருணாசலம் (முன்னாள் உதவி அதிபர், யா/அத்தியார் இந்துக்கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் மனோரஞ்சிதம் (U.S.A.), தம்பிப்பிள்ளை (முன்னாள் ஆசிரிய ஆலோசகர்-ஆங்கிலம்), தேவரஞ்சிதம் (ஆசிரியை, யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற Dr.K.கனகரத்தினம் (Formerly of the World Bank) மற்றும் ஜீவராணி (உதவிக் கல்விப்பணிப்பாளர், வாழைச்சேனை), பரிமேலழகபிள்ளை (ஆசிரிய ஆலோசகர், ஆங்கிலம் - யாழ்.வலயம்) ஆகியோரின் நேசமுள்ள மாமியாரும் மனோன்மணி (Popsy, U.S.A.), ரஞ்சிதமணி (Tina, China), கார்த்திகேயன் (5th year Medico, peoples Friendship University, Moscow), கோபிகிருஷ்ணா (CIMA Student, Colombo) ஆகியோரின் பிரிய பேர்த்தியாரும் ஆமண்டரி (China) Patric Clayton (U.S.A.), ரைஸ்ராம் (China) ஆகியோரின் பிரிய பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 26.06.2001 காலை 9.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சிறுப்பிட்டி தெற்கு,*
*நீர்வேலி.*
அ.தம்பிப்பிள்ளை (மகன்),
(89453) வே.பரிமேலழகபிள்ளை (மருமகன்)

### ஊழியரின் ஒப்புதல் இன்றியே

# பாதுகாப்பு நிதிக்கு என்று சம்பளத்திலிருந்து பிடித்தம்

## ஆட்சேபிக்கிறது ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம்,ஜூன்26

கல்விச் சேவை ஊழியர்களின் ஒப்புதல் இன்றியே, அவர்களது சம்பளத்தில் இருந்து பாதுகாப்பு நிதிக்காக பிடித்தம் செய்யப்படுவதை நிறுத்தும்படி வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவராஜாவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று அவரை நேரில் சந்தித்த தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தலைமையிலான குழுவினரே இந்த வேண்டுகோளை விடுத்தனர்.

15ஆயிரம் ரூபாவுக்கு மேல் மாதச் சம்பளம் பெறும் அரச ஊழியர்களின் சம்பளத்தில் இரண்டு சதவீதத்தைப் பாதுகாப்பு நிதிக்காக வழங்க வேண்டும் என்று அரசு சுற்றறிக்கை அனுப்பியதாகவும் -

வடமராட்சி வலயத்தில் கல்விச் சேவை ஊழியர்களின் ஒப்புதல் பெறாமலேயே கடந்த 2 மாதங்களாக அவர்களது சம்பளத்தில் பாதுகாப்பு நிதி பிடித்தம் செய்யப்பட்டு அனுப்பப்படுவதாகவும் -

இதனை உடனடியாக நிறுத்தும்படியும் -

தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் கோரினர்.

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம், மாவட்டத் தலைவர் வ.கணேசமூர்த்தி, மாவட்டச் செயலாளர் க.குமாரசாமி, பருத்தித்துறைக் கிளைச் செயலாளர் இ.நாகேந்திரராஜா, உடுப்பிட்டிக் கிளைச் செயலாளர் க.விஜயகுமார் ஆகியோரும் இந்தத் தூதுக் குழுவில் இடம்பெற்றிருந்தனர். (உ-ஒ)

## 3 சடலங்கள் புலிகளிடம் இன்று ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்26

திருநெல்வேலி மற்றும் கொடிகாமத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் உயிரிழந்த 3 இளைஞர்களின் சடலங்களும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளிடம் இன்று கையளிக்கப்படவிருப்பதாக செஞ்சிலுவை சர்வதேசக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்.ஆஸ்பத்திரியில் உள்ள இந்தச் சடலங்களைத் தாங்கள் பொறுப்பேற்று குடாக் கடலைத் தாண்டி பள்ளிக்குடாவில் வைத்து அவற்றைப் புலிகளிடம் ஒப்படைக்க விருப்பதாக அவர் சொன்னார்.(உ-3)

## பொலீஸார் 11 பேர் கைது

லஞ்ச ஆணைக்குழு கடந்த ஒரு வாரமாக மேற்கொண்ட விசாரணைகளின் போது 11 பொலீஸார் கைது செய்யப்பட்டுள்ளனர். இருநூறு ரூபா முதல் 50 ரூபா வரை லஞ்சம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## கொடிகாமம் மற்றும்

# மீசாலையில் பாடசாலைகளை மீள ஆரம்பிக்க வேண்டாம்!

## தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்26

தென்மராட்சியில் கொடிகாமம், மீசாலை போன்ற பகுதிகளில் உள்ள பாடசாலைகளை மீள ஆரம்பிக்க வேணடாம்.

- இவ்வாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வராஜாவை நேற்று பிற்பகல் நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்திருக்கின்றது இலங்கைத் தமிழர் ஆசிரியா சங்கம்.

சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் மற்றும் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்லிங்கம் ஆகியோரே இந்த வேண்டுகோளை விடுத்தனர்.

தென்மராட்சிப் பகுதிகளில் மீளக குடியமர வேண்டாமென்று விடுதலைப் புலிகள் கேட்டுக்கொண்டுள்ளதை சுட்டிக்காட்டிய தமிழர் ஆசிரியர் சங்கத்தினர்அங்கு போர்ச் சூழல் முற்றாக மாறவில்லை என்றும் -

கற்றல், கற்பித்தல்ஆகியவற்றுக்கான சூழ்நிலை அங்கு தற்போது இல்லை என்றும் - வலியுறுத்தினர்.

ஆகவே அந்தப் பகுதிப் பாடசாலைகளுக்கு அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களை வற்புறுத்தி அனுப்பக் கூடாதென்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர். (உ-ஒ)

# பிரமணாளங்குளம் வழியாக பொருள்கள் அனுப்பி வைப்பு

வவுனியா,ஜூன்26

வன்னியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்தையும் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தையும் இணைக்கும் பிரமணாளங்குளம் சோதனை நிலையப் பாதையை விடுதலைப் புலிகள் மூடிவிட்டதாக நேற்று முன்தினம் அரசுத்தரப்பு அறிவித்திருந்தபோதிலும் -

அதனைப் புலிகள் மறுத்திருக்கின்றனர்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு வாகன அணி மூலம் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் அந்தப்பாதையூடாகவே நேற்று அனுப்பப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

வவுனியாவில் இருந்து நேற்று அரிசி, சீனி, மண்ணெண்ணெய் ஆகியவற்றை ஏற்றிச் சென்ற 23 லொறிகளில் இருந்து பொருள்களை இறக்கி மாற்றி இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிக்கு அனுப்பும் பணிகள் அந்தச் சோதனை நிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதியிலிருந்து ஒரு லொறியில் நெல்லும், மற்றொரு லொறியில் கருவாடும் அந்தச் சோதனை நிலையத்துக்கு எடுத்துவரப்பட்டு வவுனியாவுக்கு ஏற்றிச்செல்லும் லொறிகளுக்கு அங்கு வைத்து மாற்றப்பட்டன. (உ-3-4)

## அம்பாறையில் நாளை துக்கம்

கொழும்பு,ஜூன்26

அமைச்சர் பேரியல் அஷ்ரப் மற்றும் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அரசில் இருந்து வெளியேறுமாறு கோரி நாளை அம்பாறையில் துக்கதினம் அனுஷடிக்கப்படவிருக்கிறது.

இதற்கான ஏற்பாடுகளை அந்தப் பகுதி பொது அமைப்புக்கள் மேற்கொண்டுள்ளன. (உ-3)

## நீர்கொழும்பில் நேற்றும் பதற்றம

நீர்கொழும்பு அலஸ் வீதியைச் சேர்ந்த பெரும்பான்மை இன இளைஞர் ஒருவர் ஞாயிறு இரவு கத்திக் குத்துக்கு இலக்கானதை அடுத்து அங்குள்ள தமிழ் மக்களின் கடைகள் தாக்கப்பட்டன. இதனால் நேற்றும் அங்கு பதற்றம் நிலவியது.

மேலதிக பொலீஸார் அங்கு குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

*(விரிவான செய்தி 11ஆம் பக்கத்தில்)* (உ-3)

## தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் கட்சிகளைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் வற்புறுத்தினர்.

அரசுக்கு எதிராக ஐ.தே.கட்சி கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப்பிரேரணைக்கு எதிராகச் சகலரும் கூட்டாகச் செயற்படுவது என்றும் அங்கு முடிவு செய்யப்பட்டது. (உ-3)

## மட்டுவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகளுக்கு விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

முற்றிலும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது இராணுவ வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது. (உ-3-4-117)

## மருதானை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாகச் சென்றதாகக் கூறப்படும் இளைஞர் குறித்து தகவல் ஏதும் இதுவரை கிடைக்கவில்லை.

வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட யுவதி கொழும்பு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-ஒ)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகனம் போய்க்கொண்டிருக்கும் போது இந்தப் பகுதிக்குள் ஊடுருவிய புலிகளினால் வெடிக்க வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் -

கிளைமோர் வெடித்ததும் அதை இயக்கிய ஆள் தப்பி ஓடியிருக்கலாம் எனவும் - செய்திகள் தெரிவிக்கின்றன.

சென்ற மாதம் கிழக்கில் விடுமுறையில் சென்றுகொண்டிருந்த கடற்படையினர் மீது நடத்தப்பட்ட இதேபோன்றதொரு தாக்குதலில் பத்துப் படையினர் பலியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-3-4)

## ஆளும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.பிக்களின் எண்ணிக்கை 15 ஆக உயரும் என்று ஐ.தே.கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

அரசின் கட்டுப்பாட்டில் உள்ள வானொலிக்கு பேட்டியளித்த அமைச்சர் அத்தாவுட செனிவிரத்ன, 1964 இல் நடந்தது திரும்பவும் நடக்கலாமெனத் தான் அஞ்சுவதாகத் தெரிவித்திருக்கின்றார்.

1964இல் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவின் தரப்பு எம்.பிக்களையே அவரது அரசுக்கு எதிராகத் திருப்பி, அந்த அரசைத் தோற்கடித்தது போன்று இப்போதும் நடக்கலாம் என்பதையே அவர் குறிப்பிட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்தத் தடவை பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் எம்.பிக்கள் சிலரை ஐ.தே.கட்சி விலைக்கு வாங்கலாம் என்பதையும் அமைச்சர் இவ்வாறு சூசகமாகக் கூறியதாகக் கருதப்படுகிறது.

"ஐ.தே.கட்சி போன்று பொது மக்கள் ஐக்கிய முன்னணியிலும் பீதி நிலவுகின்றது" என்று குறிப்பிடும் ராஜதந்திரி ஒருவர், இரு தரப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஜே.வி.பி. தரப்புக்களின் ஆதரவை இறைஞ்சி நிற்பதாகவும் கூறுகின்றார். (உ)

# முஸ்லிம் காங்கிரஸில் தங்களைச் சேர்க்க காலக்கெடு விதிக்கின்றார் ஹிஸ்புல்லா!

கொழும்பு,ஜூன்26

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் அமைச்சர் பேரியல் அஷ்ரப்பையும் தன்னையும் இணைத்துக் கொள்வதற்கு கட்சியின் தலைமைத்துவத்திற்கு எதிர்வரும் 30 ஆம் திகதி வரை தாங்கள் காலக்கெடு விதித்துள்ளதாக முன்னாள் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

காத்தான்குடி மத்திய கலாசார நிலையத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

தமது கோரிக்கை தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைமைப் பீடத்தின் சாதகமான பதில் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்காவிட்டால், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் பதவியை மீளத் தாம் ஏற்கப்போவதாகவும் அவர் அங்கு தெரிவித்தார்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசைக் கவிழ்த்தவர்கள் என்ற அவப் பெயர் முஸ்லிம் சமூகத்திற்கு வரக்கூடாது என்பதற்காகவே நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தங்கள் தரப்பினர் கையொப்பம் இடவில்லை என்றும் அவர் கூறினார். (உ-3-4)

## இலங்கை கல்வி நிர்வாக சேவை:

# கல்விச் சேவை ஆணைக்குழுவே இனி நியமன, இடமாற்றங்களை கையாளும்

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் உள்ள சகல வெற்றிடங்களும் கல்விச் சேவை ஆணைக் குழுவினாலேயே எதிர்காலத்தில் நிரப்பப் படவுள்ளன.

இது தொடர்பான சுற்றறிக்கை கல்விச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் மாகாண மேலதிக மாகாண மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கல்வி நிர்வாக சேவை அலுவல்கள் தொடர்பான நியமனங்கள் மற்றும் இடமாற்றங்கள் யாவும் கல்விச்சேவை ஆணைக்குழுவினாலேயே மேற்கொள்ளப்படவுள்ளது.

மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை கல்வி நிர்வாகச் சேவையைச் சேர்ந்த அலுவலர்கள் செவையிலிருந்து ஓய்வு பெறுதல், நீங்குதல் அல்லது இடமாற்றம் பெற்றுச் செல்வதனால் ஏற்படும் வெற்றிடங்கள் யாவும் கல்விச் சேவை ஆணைக் குழுவினாலேயே நிரப்பப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-10-51)


வேளிவயல்

ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

அளவெட்டி

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| முதலாம் பரிசு | 3860 | 6ஆம் பரிசு | 2621 |
| 2ஆம் பரிசு | 4090 | 7ஆம் பரிசு | 314 |
| 3ஆம் பரிசு | 380 | 8ஆம் பரிசு | 3311 |
| 4ஆம் பரிசு | 742 | 9ஆம் பரிசு | 4503 |
| 5ஆம் பரிசு | 2499 | 10ஆம் பரிசு | 2613 |

(89462) - தர்மகர்த்தா சபையினர்.

கணனி வடிவமைப்பின் புதிய உதயம்

LINGAM OFFSET PRINTERS & COMPUTER DESIGNERS



உங்களுக்கு தேவையான சகல TYPING வேலைகளையும் கனனி மூலம் வடிவமைத்துக் கொள்ளலாம்.

OFFSET PRINTING.

DISSERTATION TYPING.

பாடசாலை சஞ்சிகைகள், நிறுவன வெளியீடுகள், நினைவுமலர்,அழைப்பிதழ்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் என்பவற்றை OFFSET PRINTING மூலம் நியாய விலையில் செய்து கொள்ள

இனி உங்கள் தெரிவு LINGAM OFFSET PRINTERS & COMPUTER DESIGNERS

தொடர்புகளுக்கு:
லிங்கம் தொலைத்தொடர்பகம்,
ஸ்ரீ பரராஜ சேகரப்பிள்ளையார்,
கோவிலடி இணுவில்.

: 070-212641

A/L 2002 ஒரு வருட மீட்டல் வகுப்பு

தமிழ : குழந்தை

ஆரம்பம்: 30-06-2001 (2 மணி)

A/L 2001இற்குரிய வினா விடை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

புதிய உயர் கல்லூரி ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(89435)

கணனிப் பயிற்சி

சாதாரண மக்களும் கணனிக் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் வகையில் தமிழ் மொழி மூலமான விரிவுரையுடன் மிகக குறைந்த கட்டணத்தில் எமது நிறுவனத்தினால் கணனிப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

| Age | Course | Duration | Monthly Fees |
|---|---|---|---|
| 5-10 | Children Programs | 3 Month | 350/= |
| 11-15 | Children Programs with Basic Computer Application | 5 Month | 500/= |
| 16 & More | | | |
| | Diploma in M.S.Office 2000 | 5 Month | 700/= |
| | Diploma in Computer programming | 6 Month | 800/= |
| | Diploma in Computer Hardware | 6 Month | 850/= |

ஒவ்வொரு வாரமும் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகும். திங்கள் 9.00 மணிக்குப் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

UNIVAC

College of Computer Infomation Technology

Pointpedro Road, Atchuvely. | K.K.S. Road, Narchimar Kovil, Jaffna. | Arulakam Uduvil East, Chunnakam.

(89448)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.